அலங்காரங்களையும் செய்துகொண்டு, ராமர் அந்தப்புரத்தில் ஸீதையுடன் பட்டாபிஷேக விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு, வெகு கோலாஹலமாய் இருந்தார். அத்தருணத்தில் தசரதர் அழைப்பதாக ஸுமந்த்ரர் வந்து சொல்ல, ராமர் ஸீதையிடம் விடை பெற்று, ரதத்தில் லக்ஷ்மணரோடு ஏறிக்கொண்டு, கைகேயி அந்தப்புரம் நோக்கிப் புறப்பட்டார். இவர்கள் வழியிலே போகையில், எல்லோரும் ராமரைக் கண்டு ஸந்தோஷிக்க, பெரிய ஆரவாரம் ஒன்று கிளம்பியது. இந்தக் கோலாஹலமத்தியில், ரதம் தசரதர் இருக்குமிடம் வர, ராமலக்ஷ்மணர் கீழே இறங்கி, உள்ளே சென்றார்கள்.

வினா 11.—உள்ளே சென்றதும் ராமர் என்னசெய்தார்? பின் என்ன நடந்தது?

விடை.—உள்ளே சென்றதும், ராமர் தமது தகப்பனார் வெகு துக்கத்தோடு இருப்பதைக்கண்டு, 'நாம் ஏதாவது தகப்பனாருக்கு அபராதம் செய்துவிட்டோமோ' என்று வெகுவாகத் துக்கித்தார். அப்பொழுது கைகேயி வாய்கூசாது, 'உன் தகப்பனார் மனதில் ஒரு விருப்பம் இருக்கிறது. அதை உன்னிடம் சொல்ல முடியாமல் அவர் கஷ்டப்படுகிறார்' என்றாள். அப்பொழுது ராமர், 'என் தகப்பன் என்னை நெருப்பில் விழு, விஷம் உண், என்ற எந்தக் கொடிய கட்டளையிட்டாலும் ஸரி, நான் அதைத் தவறாது செய்யத் தயாராய்க் காத்திருக்கிறேன்' என்று உறுதிமொழி கூறினார். இதைக்கேட்டதும் கைகேயி 'நீ பதினான்கு வருஷம் வநவாஸம் செய்யவேண்டும், உனக்

குப் பதிலாக அயோத்யைக்குப் பரதன் அரசஞக ஆள வேண்டும்' என்ற இந்த இரண்டு வரங்களை நான் தசரதரிடம் யாசித்தேன். அவர் முன் சம்பராஸுர யுத்தத்தில், எனக்கு இரண்டு வரங் கொடுத்திருந் தார். அதை நான் இதுவரையில் கேட்கவில்லை. இப் பொழுதுதான் கேட்டேன். ஆகையால் அவர் உன் னைக் காட்டிற்குப் போகச் சொல்ல வேண்டியது தான். அப்படிச்சொல்ல மனம் வராது, அவர் துக் கிக்கிறார். ஆகையால் நான் அதை உன்னிடம் சொல் லியாய்விட்டது. நீ இனிமேல் என்ன செய்வாயோ செய்' என்று சொல்லி வாயை மூடிக்கொண்டாள். ராமர் அப்படியே செய்வதாக ஒப்புக்கொள்ள, கை கேயி, 'நீ இன்றையதினமே காட்டிற்குப் புறப்பட வேண்டியதுதான். நீ போன பின்புதான் தசரதருக் குக தேஹத்தில் ப்ரஞ்ஜை வரும்' என்றாள். உடனே ராமர், கௌஸல்யை, ஸீதை முதலியவரிடம் விடை பெற்று, 'இப்பொழுதே காட்டிற்குப் புறப்படுகிறேன். சீக்ரம் பரதனுக்கு ஆள்விடுங்கள்' என்று சொல்லிவிட்டு லக்ஷ்மணரை அழைத்துக்கொண்டு, தன் தாய் இருக் கும் அந்தஃபுரத்துக்கு வெகு அவஸரமாய் வந்தார்.

வினு 12.—கௌஸல்யைக்கும் ராமருக்கும் அங்கு என்ன ஸம்பாஷணை நடந்தது? அங்கு வேறு என்ன நடந்தது? எல்லாம் எவ்வாறு முடிவுபெற்றது?

விடை.—ஸ்ரீராமர் தம் தாயாரிடம் வநத்திற்குப் புறப்பட்டுப் போவதாகச் சொன்னார். அப்பொழுது அவளுக்கு மிகுந்த துக்கம் வந்துவிட்டது. கைகேயி தன்னை இவ்வாறு பின் கஷ்டப்படுத்துவாள் என்ற

எண்ணம் அவளை மிகவும் பாதித்தது. ராமனை எவ்வளவோ சொல்லிக் காட்டிற்குப் போகவேண்டியதில்லை என்று தடுக்கப்பார்த்தாள்; அப்பொழுது பிதிர்வாக்ய பரிபாலநத்தால் மேன்மை அடைந்த பரசுராமர், ஸகரபுத்ரர் முதலியவாது செய்கைகளை எடுத்துச்சொல்லி ராமர் தமது எண்ணத்தை வெளியிட்டார். அப்பொழுது லக்ஷ்மணர் தமது கோபத்தை வெளியிட்டுத் தசரதர் கைகேயி முதலியவர்களைத தூஷித்துப் பேசி, அப்பொழுதே அவர்களைக் கொன்றுவிடுவதாக பரபரப்புடன் கிளம்பினார். ராமர், லக்ஷ்மணரை ஸமாதானப்படுத்தினார். கௌஸல்யை உடனே ராமரைப்பார்த்து, 'நீ மாதாவின் வாக்யத்தைப் பரிபாலநம் செய்தால் என்ன? நான் உன்னைக் காட்டிற்குப் போகவேண்டாம் என்கிறேன்' என்றாள். ராமர் தம் தாயை ஒருவாறு தேற்றிவிட்டு, லக்ஷ்மணரை நோக்கிப் பட்டாபிஷேக ஏற்பாட்டை நிறுத்திவிட்டுத் தான் வநம் போவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்படி ஏவினார் பின்பு விதியின் மஹிமையை எடுத்து விஸ்தாரமாய்ச் சொல்லி, லக்ஷ்மணருக்குக் கைகேயியிடம் இருந்த கோபததை ராமர் ஒருவாறு மாற்றினார். லக்ஷ்மணருக்குக் கைகேயியிடம் இருந்த கோபம் ஸமாதாநமாகாதது கண்டு, ராமர் உறுதியாய் 'நான் தகப்பனார் உத்தரவின்படிதான் அவச்யம் செய்யப்போகிறேன். நீ வீணாகக் கோபித்துக்கொள்ளுவதில் என்ன ப்ரயோஜநம்' என்று தமது அபிப்ராயத்தை வெளியிட்டார். அப்பொழுது கௌஸல்யை தானும் ராமரோடு காட்டிற்குப்போவதாகச் சொன்னாள். அதற்கு ராமர், 'நீர்,

கைகேயியினிடம் அகப்பட்டுத் தத்தளிக்கும் என்தகப்ஞை ஜாக்ரதையாய் இங்கிருந்து காப்பாற்றவேண்டியது' என்று சொல்ல, கௌஸல்யை ஒருவாறுதேர்ந்து ராமனுக்கு வநம் போய்வா உத்தரவு கொடுத்தாள்?

வினா 13.—இதன்பின்பு ராமர் எங்கு சென்றார் அங்கு என்ன ஏற்பாடுகள் நடந்தன?

விடை.—இதன்பின்பு ராமர் தமது அரண்மனை சென்று ஸீதையிடம் தான் வநம்போகும் ஸங்கதியைச் சொல்லப்போனார். ஸீதை ராமரைக் கண்டதும், அவர் முகவாட்டத்தின் காரணத்தை விசாரிக்க, அவர் தாம் வநம் போகப்போகிற ஸமாசாரத்தைச் சொல்லி, தாமில்லாத ஸமயத்தில், தசரதர் கௌஸல்யை, கைகேயி முதலியவர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய மாதிரி இன்னதென்றும், பரதன் அயோத்யையில் அரசனாக வரும்பொழுது "அவன் மனம் கோணும்படி தம்மை ஒருநாளும் அதிகமாகத் துதிக்கக் கூடாது" என்றும் ஸீதைக்கு புத்திமதிகளை மிகுந்த அன்போடு கூறிமுடித்தார். அப்பொழுது ஸீதை மிகுந்த கோபங்கொண்டு, தான் தன் நாதனை விட்டுப்பிரிந்து அயோத்யையில் இருக்கப்போகிறதில்லை என்று மறுமொழிகூற, ராமர் வநவாஸம் மிகக் கொடியது என்றும், அதை அவளால் தாங்கமுடியாது என்றும் வெகுவாகச்சொல்லிப் பார்த்தார். ஸீதை அவைகளைக் கேட்காது பிடிவாதமாய் இருக்கக்கண்டு ராமர், அவளைத் தம்மோடு அழைத்துப் போவதாகத் தீர்மானித்தார். அந்தத் தருணம் பார்த்திருந்த லக்ஷ்மணர் தாமும் ராமனுடன் வநம் வருவதாகச் சொல்ல, அவருக்கு கௌஸல்யை,

தசரதர் முதலியோரைப் பாதுகாத்து வருதல் நலம் என்று, ராமர் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். அதற்கு அவர், பரதன் நற்குணம் வாய்ந்தவனாகையால் அவன் அவர்களை நன்றாகக் காத்துவருவான் என்றும் அவ்வாறு அவன் செய்யாதிருப்பின் தாமே வந்து அவனை அடக்கிவிடலாமென்றும் ஸீதையோடுபோகும் ராமருக்குத் தாம் தகுந்த ஸஹாயம் காட்டில் புரியலாமென்றும எடுத்துச்சொல்லி லக்ஷ்மணர் தாமும் ராமரோடு அவச்யம வநம் போவதாகச்சொன்னார். இவரையும் கூடவே அழைத்துப் போவதாக ராமர் தீர்மானித்தார்.

வினா 14.—இவ்வாறு ராமர் தீர்மானித்ததும், வநம் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் என்ன அவர் செய்தார்? ஜநங்கள் என்ன செய்தார்கள்?

விடை.—ராமர் லக்ஷ்மணரை அனுப்பி வஸிஷ்ட புத்ரராகிய ஸுயஞ்ஞர் என்பவரை அழைத்து வரச்சொல்லி அவருடைய அநுமதியின்பேரில் ராமர், லக்ஷ்மணர், ஸீதை ஆகிய இவர்கள் தரும் ஆடை ஆபரணாதிகளைத் தகுந்த ப்ராஹ்மணருக்கு விதிப்படி தாநம் செய்து அவர்களை த்ருப்திசெய்துவிட்டு, வநம்போவதற்குவேண்டிய வேஷந்தாங்கி ஸங்கல்பாதிகள் செய்துகொண்டு தசரதரிடம் அநுமதிபெற்று வநத்திற்குப் போக, தசரதர் இருக்கும் அந்தஃபுரம் நோக்கிப் புறப்பட்டார்கள். ராமருக்குப் பட்டாபிஷேகம் நடக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஜநங்கள் யாவரும், அதற்குள் ஸமாசாரத்தை அறிந்து துக்கிக்கலாயினர். இப்படி இருக்க ராமர் முதலியோர் ஆபரணமின்

றிப் புறப்பட்ட உடன், அவர்களைக் கண்டு துக்கம் பொறுக்கமாட்டாமல் அயோத்யா நகரவாஸிகள் யாவரும் 'ராமர் இருக்கிற இடமே அயோத்தி. இதைவிட்டு ராமர் போனால் நாம் எல்லோரும் அவரோடு கூடவே போய் விடுவோம். நமது வீடுகளில் எருக்கு முளைத்து, எலிகள் குடி இருக்கட்டும், இவைகளையே ப்ரஜைகளாகக்கொண்டு கைகேயியும் பாதனும் அரசாளட்டும்' என்று வாய்விட்டு அலறத்தொடங்கினர்.

வினு 15.—ராமர் முதலியோர் தசரதரிடம் எவ்வாறு விடைபெற்றுச் சென்றார்கள்? அப்பொழுது தசரதர் இருந்தவிடத்தில் என்னென்ன நடந்தது?

விடை.—தசரதர் இருந்த அந்தஃபுரம் வந்ததும், ராமர் தாம் விடைபெற்று வநம்போக வந்திருப்பதாக ஸுமந்த்ரரிடம் சொல்லியனுப்பினர். இதைக தசரதரிடம் தெரிவிக்க, அவர் ஸுமந்த்ரர் மூலமாய்த் தமது பெண்சாதிமார் எல்லோரையும் அங்கு வரவழைத்து, அதன் பின்பு ராமர் முதலியோரை அங்கு வரச்சொன்னர். இவர்களைக் கண்டதும் தசரதருக்குத் துக்கம் அதிகரிக்க, அவர் மூர்ச்சையாய் விழுந்தார். அப்பொழுது அவர் பெண்சாதிகள் யாவரும் ராமர் வநம்போவதை நினைத்து ப்ரலாபிக்கத் தொடங்கினர். இதன் மத்தியில் கைகேயி, அவஸரமாய் மூன்று மர உரிகளைக்கொடுத்து, ராமாதிகளை அணிந்துகொண்டு சீக்ரம் வநம் போகும்படி ஏவினள். ராமரும் லக்ஷ்மணரும் எளிதில் இவைகளைத் தரித்துக்கொண்டார்கள். ஸீதை மாத்ரம் இதை எவ்வாறு போட்டுக் கொள்வது என்பதை அறியாது தத்தளிப்பதைக்

கண்டு ராமர், அதை ஸீதைக்கு நன்றாக உடுத்தினர். இதைக்கண்டதும் ஜனங்களுக்குத் துக்கம் அதிகரித்தது. அப்பொழுது வஸிஷ்டருக்குக் கோபாவேசம் வர, கைகேயியை வாயில் வந்தபடி திட்டி, ராமரை நோக்கி ஸீதையையாவது அயோத்யையில் விட்டுப் போனால் அவளை ராஜஸ்தானத்தில் வைத்துத் தாங்கள் த்ருப்தி அடைந்திருப்பதாகச் சொன்னர். தசரதரும் மூர்ச்சைதெளிந்து எழுந்து கைகேயியை நிந்தித்துவிட்டு, ராமருடன் ஸேனைகள் பொக்கிஷங்கள் ரதாதிகள் முதலிய வைபவங்கள் காட்டிற்குப்போய் அவரை ஸுகப்படுத்தட்டும் என்று ஏவ, அது கூடாது என்று கைகேயி தடுத்துவிட்டாள். ராமரும் அவைகள் தமக்கு அநாவச்யம் என்று சொல்ல, தசரதர் அரைமனதோடு ராமரை வநம் போய்வரும்படி சொல்லிவிட்டு, மூர்ச்சையடைந்து விழுந்தார். உடனே ஸுமந்த்ரரால் தயார் செய்யப்பட்டு, ஆயுதம் முதலியவைகளால் நிரப்பப்பட்ட ரதம் வர, ஸீதை லோகரக்ஷணார்த்தம் வநம் போவதுபோல் அதில் வெகு ஸந்தோஷத்தோடு முதலில் ஏற, பின்பு ராமலக்ஷ்மணர்கள் ஏறினர்கள். உடனே ரதம் வநம் நோக்கிப் புறப்பட்டது.

வினு 16.—ராமர் அயோத்யை விட்டுப் போகையில் என்னென்ன விசேஷம் நடந்தது ?

விடை—கௌஸல்யை அழுதுகொண்டு ரதத்தின் பின் ஓடிவந்தாள். இதைக்கண்டு ஸஹியாது, ராமர் ரதத்தை வேகமாய் ஓட்டும்படி ஸுமந்த்ரரிடம் சொன்னர். ரதம் வேகமாய் ஓடவே, கௌஸல்யை

திரும்பிப்போய்த் தசாதரை ஆச்வாஸப்படுத்த, அவர் கௌஸல்யை ஸுமித்ரை எவ்லோரும் சேர்ந்து ராம ரது பிரிவாற்றாமையால் மிகவருந்தினார்கள் ராமரது ரதத்தின் தூளி தெரியும் வரையில் அவர்போன திக்கையே எல்லோரும் கண்கொட்டாது வெகு ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தனர். அயோத்யா நகர வாஸிகள் யாவரும் ராமரோடு வநத்திற்குக் கூட்டங் கூட்டமாகப புறப்பட்டுக தேரை வளைத்துக்கொண்டனர். ராமர் தேரை வேகமாய் நடத்தும்படியும், ஜநங்கள் அநேக ஸமயத்தில் தேரை மெதுவாய் நடத்தும்படியும் சொல்ல, ஸுமந்த்ரர் தேரை நடத்தமுடியாமல் தத்தளித்தார். இவ்வாறு ஸகல ஜநங்களும் சூழப்பெற்று ரதம் ஊருக்கு வெளியில் வெகுதூரம் போய்விட்டது.

வினு 17.—தம்மோடு கூடவே புறப்பட்டு வந்த ஜநங்களை எவ்வாறு ராமர் அயோத்யைக்குப் போகும்படி செய்தார்?

விடை.—அன்றிரவு யாவரும் தமஸா நதி தீரம் அடைந்து அங்கு தங்கினார்கள். மறுநாட் காலையில் எல்லோரும் எழுந்திருப்பதற்கு முன், ராமாதிகள் எழுந்து ரதத்தில ஏறிக்கொண்டு, தமஸா நதியைக் கடந்து ரதத்தை எல்லாப் பக்கத்திலும் விட்டதுபோல அடையாளத்தைக் காட்டிவிட்டு, கடைசியில் ஏதோ ஒரு சிறு காட்டுவழியாய்க் கங்காநதியை நோக்கிச் சென்றார்கள். அயோத்யா நகர வாஸிகள் ராமாதிகளைக் காணாது துக்கித்து, அவர் போனவழி எளிதில் அறிய முடியாததால் அயோத்யைக்குத் திரும்பினார்கள்.

அங்கே சென்றதும் வீட்டுப் பெண்டுகள் யாவரும், தமது கணவர்கள் ராமரை விட்டுவந்ததைப்பற்றி வெகுவாகத் துக்கித்தார்கள்.

வினு 18.—கங்கைக்கரை அடைந்ததும் ராமர் என்ன செய்தார்? கங்கையைக் கடப்பதற்கு அங்கு யாருடைய ஸஹாயம் கிடைத்தது?

விடை.—ஸாயங்காலம் ராமர் கங்கைக்கரையை அடைய, அங்கேயே அன்றிரவு தங்கினுர். அங்கு அருகில் ச்ருங்கிபேரம் என்ற பட்டணம் ஒன்று இருந்தது. அதற்குக் குஹன் என்ற வேடராஜன் அதிபதியாய் இருந்தான். அவன் சிறந்த ராமபக்தன். ராமர் கங்கைக்கரை வந்தார் என்ற செய்தி கேட்டதும், ஆஹாராதிகளைத் தயார் செய்துகொண்டு குஹன் ஓடிவந்து, ராமரைக்கண்டு, அவரை வெகு அன்போடு ஆலிங்கனம்செய்தவராய்த் தான் கொண்டுவந்த வஸ்துக்களை அவரது பாதாரவிந்தங்களில் ஸமர்ப்பித்தான். ராமர் தாம் ரிஷிகளின் வ்ரதமபூண்டு வநவாஸம் செய்வதாக வந்திருக்கிறபடியால் தமக்கு அவை வேண்டாம் என்றும், குதிரைகளை நன்ருய்ப் பாதுகாத்தால்போதும் என்று சொல்ல, குஹன் குதிரைகளுக்குத் தீனி போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, லக்ஷ்மணரோடு காட்டிலிருந்த பழம் கிழங்கு முதலியவைகளை எடுத்துக்கொண்டுவந்து ராமர் முன் வைத்தான். ராமரும் ஸீதையும் இதையுண்டு, தரையில் படுத்துக்கொள்ள குஹன் லக்ஷ்மணர் ஸுமந்த்ரர் ஆகிய இவர்கள் அயோத்யையில் நடந்த விசேஷங்களைப்பற்றி பேசிக்கொண்டே ராமருக்குக் காவலாக அன்றி

வைக் கழிக்க, மறுநாட் காலையில் எழுந்து கங்கை யைக் கடப்பதற்கு வேண்டிய ஓடம் முதலியவைக ளைக் குஹன் ஏற்பாடு செய்தான்.

வினு 19.—கங்கையைக் கடப்பதற்குமுன், ராமர் ஸுமந்த்ரரிடம் தசரதருக்கு என்ன சொல்லி அனுப்பினுர் ?

விடை.—கங்கையைக்கடக்க, ராமர் முதலியோர் ஓடம் ஏறும் தருணத்தில், ஸுமந்த்ரர் அயோத்திக் குத் திரும்பிப் போவதற்கு மனம் வராமல், தாமும் வநம் வருவதாகச் சொன்னுர். அப்பொழுது ராமர், கைகேயி ஸந்தேஹமின்றித் தெளிந்து ஸுகிப்பதற் காக 'நீ அவச்யம் அயோத்திக்குப் போய். நாங்கள் வநம் போய்விட்டோம் என்ற ஸங்கதியை அவளி டம் சொல்லவேண்டியது. கௌஸல்யாதி தாயார்கள் எல்லோருக்கும் எங்கள் நமஸ்காரத்தைச் சொல்லவும். எங்களைக் காட்டிற்குப் போகும்படி ஏவினதால் எங்க ளுக்கு யாதொரு மனக்குறைவுமில்லை என்றும், 14-வருஷங்களை வெகு சீக்ரத்தில் கழித்துவிட்டு வருவோம் என்றும், இதற்காக அவர் துக்கிக்கவேண் டாம் என்றும், தசரதரிடம் அவச்யம் சொல்லவேண் டும். சீக்ரம் பரதனுக்குப் பட்டாபிஷேகத்தைச் செய்துவிடும்படி நான் வற்புறுத்தியதாகத் தசரத ரிடம் சொல்லவும்,' என்ற ஸமாசாரங்களைச் சொல்லி ஸுமந்த்ரரைத் தம்மோடு வாரதபடி ராமர் தடுத்து விட்டார். ஸுமந்த்ரரும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

வினு 20.—பின்பு எவ்வாறு இவர்கள் கங்கையைக் கடந்தார்கள்? அப்பொழுது என்னென்ன நடந்தது?

விடை.—இவ்வாறு ஸுமந்த்ரரிடம் சொல்லிவிட்டு, ராமர் குஹனை ஆலம்பால் கொண்டுவரும்படி செய்து, ராமும் லக்ஷ்மணரும் தமது தலைமயிரை ஜடையாக்கிக்கொண்டு, ரிஷி உருவம் தரித்தார்கள். உடனே பக்கத்தில் தயாராய் இருந்த ஓடத்தில் எல்லோரும் ஏறிக்கொண்டு, குஹன் ஸுமந்த்ரர் முதலியோரை நிற்கும்படி சொல்லிவிட்டு ராமர் ஓடத்தை விடும்படி சொன்னார். குஹனது வேலைக்காரர்கள் ஓடத்தைத் தள்ளத்தொடங்கினார்கள். ராமலக்ஷ்மணர்கள் முதலில் கங்கையைத் துதித்தார்கள். பின்பு ஓடம் கங்கை மத்தியில் போகையில், ஸீதை தன் கணவன் தசரதரது வாக்ய பரிபாலனத்தைச் செய்து அயோத்திக்குத் திரும்பி வந்த உடன், கங்கைக்குத் தகுந்த பூஜை முதலியவைகள் செய்வதாக ப்ரார்த்தித்துக் கொண்டாள். ஓடம் மெதுவாகக் கங்கையின் தென் கரையை அடைந்தது.

வினு 21.—கங்கையைக் கடந்ததும் அன்றிரவை ராம லக்ஷ்மணர்கள் ஒருவர் ஸஹாயமும் இன்றி எவ்வாறு கழித்தனர்?

விடை.—அயோத்யையைவிட்டுத் தாம் புறப்பட்டு வந்த பின்பு, பட்டுக்கொண்டிருக்கும் பாட்டையும், காமத்தால் தசரதருக்கு வந்த கேடுகளையும், கைகேயி துர்க்குணத்தையும், அவளால் ஸுமித்ரை கௌஸல்யை படப்போகிற பாட்டையும்பற்றி, முத

யில் எண்ணி ராமர் துக்கித்தார். இதன்பின்பு லக்ஷ்மணரை இந்த அவஸரதில் அயோத்திக்குப் போகும்படி சொன்னார். அயோத்தியை ஜயித்து அடக்கியாளத் தாம் ஒருவரே போதும், ஆனால் தகப்பனர் உத்தரவிற்கு விரோதமாய் நடந்து கொள்ளுதல் பாபஹேது என்ற எண்ணத்தால் தாம் அவ்வாறு செய்யாதிருந்ததாய் . ராமர் சொல்லிக்கொண்டார். இவ்வாறு துக்கப்படும் ராமரை லக்ஷ்மணர் ஒருவாறு தேற்ற, ஓர் ஆலமரத்தடியில் ஸீதையோடு ராமர், லக்ஷ்மணரால் கொண்டுவரப்பட்ட காய் கிழங்கு வர்க்கங்களைப் புஜித்துவிட்டுப் படுத்துக்கொண்டார். லக்ஷ்மணர் விழித்துக்கொண்டே இருந்து ராமரையும் ஸீதையையும் பாதுகாத்து வந்தார். அன்றிரவு இவ்வாறு கழிந்தது.

வினு 22.—இதன் பின்பு ராமர் எங்குசென்றார்? அங்கு என்ன நடந்தது?

விடை.—பொழுது விடிந்ததும், ராமர் முதலியோர் கங்கா யமுனு ஸங்கமத்தை நோக்கிப் போய், ஸாயங்கால ஸமயத்தில் அங்கிருந்த பரத்வாஜாச்ரமத்தின் அருகில் வந்து சேர்ந்தார்கள். உடனே ரிஷியாச்ரமத்துள் புகுந்து இவர்கள் தமது ஸங்கதியை ரிஷிக்குத் தெரிவிக்க, இவர்களுக்குத் தகுந்த மர்யாதை செய்து அங்கேயே 14-வருஷங்களையும் கழிக்கும்படி பரத்வாஜர் ராமரை வேண்டிக்கொண்டார். அதற்கு ராமர், அங்கிருந்தால், அயோத்யா நகரவாஸிகள் தம்மேலிருக்கும் ப்ரியத்தால் தம்மை அடிக்கடிவந்து தொந்திரவு பண்ணுவார்கள் என்று சொ

ல்லி, ஸீதை ஸுகமாய் வஸிக்கத்தக்க இடம் ஏதா வது இருக்குமா என்று பாத்வாஜரைக் கேட்டார்.

வினு 23.—பாத்வாஜர் என்ன பதில் சொன்னார்? பின்பு ராமர் என்ன செய்தார்?

விடை.—'ஸீதை வஸிக்கத்தக்க ஸுகமான இடம் ஒன்று அருகே இருக்கும் சித்ரகூட மலையில் இருக்கிறது. அங்கேபோய் நீங்கள் வஸிக்கலாம்' என்று பாத்வாஜர் சொல்ல, ராமர் ரிஷியிடம் விடை பெற்று சித்ரகூடத்தை நோக்கிப் புறப்பட்டு, அவர் கள் கூடியசீக்ரதில் அங்குபோய்ச் சேர்ந்தார்கள். அங்கு ஒரு ஏகாந்தமாயும் ஸுகமாயும் உள்ள இடத் தில் காட்டுமரம் இலைகள் முதலியவைகளால் லக்ஷ் மணர், ஒரு பர்ணசாலைகட்ட, அதில் சாஸ்த்ரப்படி ராமர் முதலியோர் குடியேறி வெகு ஸுகமாய் வந வாஸம் செய்யத்தொடங்கினர்.

வினு 24.—ராமர் வநம்நோக்கிச் சென்றதும் ஸுமந்த்ரர் என்ன செய்தார்?

விடை.—ஸுமந்த்ரரும், குஹனும் ராமர் ஓடம் தெரியும்வரையில் கங்கையைக் கண்கொட்டாது, மிகு ந்த துக்கத்தோடு பார்த்துவிட்டு, பின்பு ச்ருங்கிபேர புரம் சென்றனர். அங்கு ஸுமந்த்ரர் அயோத்தி யில் நடந்த அந்யாயங்களைக் குஹனிடம் விஸ்தார மாகச் சொல்லி, துக்கித்துக்கொண்டு சில நாள் இருந்தார். இதற்குள் குஹனது தூதர்கள் வந்து ராமருக்குப் பாத்வாஜர் மர்யாதை செய்ததையும், அங்கிருந்து ராமர் சித்ரகூடமலை சென்று வநவாஸம் செய்வதாக ஏற்பாடு செய்ததையும் குஹனிடம்

சொல்ல, ஸுமந்த்ரர் இந்த ஸங்கதியை அறிந்து கொண்டு அயோத்தி நோக்கிப் புறப்பட்டார்.

வினு 25.—ஸுமந்த்ரர் அயோத்திக்குப் போக அங்கு என்னவாக இருந்தது?

விடை.—அயோத்யா நகரவாஸிகள் எல்லோரும் மிகுந்த துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதையும், நகரமே ஒளி இழந்து கிடப்பதையும் பார்த்துக்கொண்டு, ஸுமந்த்ரர் தசரதர் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அந்தப்புரம் வந்து சேர்ந்தார். அங்குள்ளவர்கள் எல்லோரும் ஸுமந்த்ரரைக் கண்டதும் கூக்குரலிட்டு அழத்தொடங்கினர். தசரதரும் கௌஸல்யையும் மூர்ச்சையாய் விழுந்தனர். ஸுமந்த்ரர் இவர்களைத் தேற்ற, தசரதர், கடைசியாய் ராமர் என்ன சொல்லிப்போனார் என்று அவரைக் கேட்டார். ஸுமந்த்ரர் ராமர் சொல்லிப்போனவைகள் எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொல்ல, தசரதருக்குத் துக்கமேலிட்டு மிகவும் கஷ்டப்பட்டார். ஸுமந்த்ரர் இவர்களைத் தேற்றிக்கொண்டு தமது காலத்தை மிகுந்த கஷ்டத்துடன் அயோத்தில் கழித்துவந்தார்.

வினு 26.—தசரதர் கதி கடைசியாய் என்னவாயிற்று? ஏன்?

விடை.—தசரதருக்கு, 'அந்யாயமாய், ராமனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டோமே' என்ற துக்கம் நிரம்ப பாதித்துக்கொண்டிருந்தது. இது போதாதென்று கௌஸல்யை தன் கஷ்டம் பொறுக்காது அலறுவதோடுகூட, அடிக்கடித் தசரதரைப் பழித்தும் வந்தாள். இதனால் தசரதர் கஷ்டம் அதிகரிக்க, அவரது மனமு

டைந்தது. ராமர் காட்டிற்குப்போன ஆறும் நாள் ராத்ரி, தசரதருக்கு ஏதோ ஒரு பழைய ஸங்கதி ஞாபகத்திற்கு வர, தாம் சீக்ரத்தில் இறந்து விடுவோம் என்று எண்ணமுண்டாயிற்று. இது உண்டானதும், ராமரைப்பற்றி வாய்ஓயாது அன்றிரவெல்லாம் புலம்பிக்கொண்டு பரிதபித்துவிட்டு ஏழாம் நாள் தசரதர் இறந்தார்.

வி 27.—தசரதருக்குத் தன் மரணத்தைப்பற்றிய பழைய சங்கதி என்ன அன்று ஞாபகம் வந்தது?

விடை.—தமக்குக் கல்யாணமாவதற்கு முன், தசரதர் ஒரு நாள் காட்டிற்கு வேட்டைக்குப்போனார். ஸூர்யாஸ்தமனம் வரையில் வேட்டையாடிவிட்டு வீட்டிற்குத் திரும்ப எண்ணுகையில், சப்தவேதி (ஓசை வரும் வழியே சப்தால் வேலை செய்யும் பாணம்) என்ற பாணத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்ற, அப்பொழுது அந்த காமையில் ஸரயுவில், ஏதோ ஒரு காட்டும்ருகம் தண்ணீர் குடிப்பதுபோன்ற சப்தம் அவர் காதில் விழுந்தது. அந்தச் சப்தம் வந்த திக்கை நோக்கி, அவர் பாணம் போட்டார். பாணம்போய்ப் பட்டதும், ஐயோ என்ற மனிதர் குரல்போன்ற சப்தம் கேட்க, அவர் ஓடிப்போய் அங்கே பார்த்தார். அங்கு கையும் குடமுமாயிருந்த ரிஷிபுத்ரன்மேல், தன் பாணம் தைத்திருப்பதையும், அவன் புலம்பிக்கொண்டு வருந்துவதையும் கண்டு அரசன் மிகத் துக்கித்து, ரிஷிகுமாரன் முன்னே சென்று, தானே அறியாது அம்பெய்துவிட்டதாகத் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டார். ரிஷிகுமாரன்

மிகுந்த கஷ்டத்தோடு; தனது கிழவரும், குருடருமான தாய் தந்தையர், தான் தண்ணீர் கொண்டுவருவதை எதிர்பார்த்திருப்பார்கள் என்றும், அவர்களிடம் போய்த் தனக்குவந்த ஆபத்தை அரசனே தெரிவித்துவிட வேண்டும் என்று சொல்லி தனது ஆச்ரமத்திற்குப் போகும் வழியைக் காட்டிவிட்டு இறந்தான். அரசன் அந்த ரிஷிகுமாரன் ஆச்ரமம் சென்று, தான் அறியாமையால் செய்த பெரும்பாபத்தை ஒளிக்காது சொல்லிவிட, பெரிய ரிஷி 'உனக்கும் பிள்ளை இல்லாதிருக்கையில் புத்ர சோகததால் மரணம் வரட்டும். நீ அறியாமையால் இவ்வாறு செய்ததால், ப்ரஹ்மஹத்தி முதலிய பெரிய தோஷங்கள் ஒன்றும் உன்னை அணுக வேண்டாம்' என்று ஒரு சாபத்தைக் கொடுத்துவிட்டார். இந்தமாதிரி பால்யத்தில் ஒரு ரிஷியால் தமக்கு நேரிட்டிருந்த சாபம் தசரதருக்கு ஆறும் நாள் இரவு ஞாபகம்வர, இது ஒருபக்கம் அவர் மனதை உடையும்படி செய்தது.

விஞ 28.—தசரதர் இறந்ததும் அயோத்தியில் என்னென்ன நடந்தன?

விடை.—கௌஸல்யை தன் புத்ரனையும் பர்த்தாவையும் இவ்வாறு ஏககாலத்தில் இழந்து மிகுந்த துக்கமடைந்து அடிக்கடி மூர்ச்சையாய்விழுந்தாள். கைகேயியைக் காணும்போதெல்லாம் தன்மனக்கொதிப்பை வாய்விட்டுச் சொல்லிக் கதறினாள். மற்றுமுள்ள பெண்சாதிமார்கள் எல்லோரும் கைகேயியை நொந்துகொண்டு வெகுவாகத் துக்கித்தனர். இந்த ஸங்கதி வஸிஷ்ட வாமதேவர்தி மஹரிஷிகளுக்குத் தெரிய வந்ததும்

அவர்களால் ஏவப்பட்ட சிலர் அரசனது தேஹத்தைத் திவ்யமான தைலங்களில்போட்டுவைத்து கொஞ்ச நாள் அழுகாதிருக்கும்படி செய்தார்கள். இதன்பின்பு ரிஷிகளது அபிப்ராயப்படி, வஸிஷ்டர் கேகய தேசத்திலிருக்கும் பரதனுக்குச் சில தூதர்களை அனுப்பி, 'ஒரு அவச்யமான கார்யம். தாமதிக்காமல் வரவும்' என்று, உள்ள ஸங்கதி வெளியிடாது சொல்லிப் பரத சத்ருக்நர்களைச் சீக்ரம் அழைத்துவரும்படி ஏவினார்.

வினா 29.—தூதர் கேகய தேசத்துள் போவதற்கு முன் அங்கு என்ன நடந்திருந்தது? பரதன் தூதரைக் கண்டபின்பு என்ன செய்தான்?

விடை.—தூதர் கேகயராஜ்யம் போவதற்குமுன், பரதன் தசரதர் விஷயமாய் ஒரு பெரிய ஸ்வப்நத்தை கண்டுவிட்டுத் தசரதர் என்னவாயிருக்கிறாரோ என்ற ஏக்கம் பிடித்துப்போய் ஒருவரோடும் பேசாது இருந்தான். இவ்வாறு இருக்கையில், வஸிஷ்டரால் அனுப்பப்பட்ட தூதர்கள் வந்து, பரதனிடம் வஸிஷ்டர்சொல்லி அனுப்பிவித்தவாறே சொல்ல, பரதன், தசரதர் முதலியவர்களது க்ஷேமங்களை விசாரிக்க தூதர் நடந்த விஷயங்களைச் சொல்லாது எல்லோரும் ஸௌக்யந்தான் என்று பொதுவாய்ச் சொல்லிவிட்டார்கள். உடனே பரதன் தனது கேகயாதிபதி முதலிய உறவினரிடம் விடைபெற்று, சத்ருக்நரோடு கேகயராஜ்யம்விட்டு, அயோத்யை நோக்கிப் புறப்பட்டான்.

வினா 30.—அயோத்திக்குப் போகையிலும், அங்கு

போனபின்பும் பரதன் ஸ்திதி என்னவாய் இருந்தது ?

விடை.—போகும் வழியில், பரதனுக்கு மனம் நோாகவே இல்லை. பயந்துக்கொண்டே இருந்தது. இதற்குக் காரணம் என்ன இருக்கலாம் என்று அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அயோத்யா நகரத்திற்கு அருகில்வந்து அந்தவூர்க் கோட்டை கொத்தளங்களை நோக்க, யாது காரணத்தாலோ எல்லாம் ஒளி இழந்தன என்று பரதனுக்குத் தோன்றியது. அயோத்யா நகர வீதிகளில் போகும்பொழுது, அவன் எங்கு பார்த்தாலும் துக்கக் குறிகளைக் கண்டானே ஒழிய, வேறொன்றையும் காணவில்லை. இவ்வளவு கெட்டகுறிகளைப் பார்த்துக்கொண்டே பரதன் அரசன் அரண்மனையுட்புகுந்து அரசனிருக்கும் இடத்திற்குச் சென்று பார்க்க, அங்கு அரசனைக் காணவில்லை. உடனே திடுக்கிட்டு, மிக வருத்தத்துடன், தன் தாய் கைகேயியின் இருப்பிடம் செல்ல, அங்கு அவள் ஒருவாறு ஸந்தோஷப்பட்டுக்கொண்டிருப்பதை அவன் கண்டான்.

வின 31.—பரதனுக்கு, அயோத்யையில் தான் இல்லாதகாலத்தில் நடந்தவிஷயங்கள் எல்லாம் எவ் தெரியவந்தது ?

விடை.—கைகேயி இவ்வாறு இருப்பதைக் கண்டு, தன் தகப்பனர் எங்கே என்று பரதன் அவளைக் கேட்டான். கைகேயி முன்பின் யோஜிக்காது 'உன் தகப்பன் கொஞ்சநாளைக்கு முன்தான் இறந்துபோய் விட்டார்' என்ற உண்மையைத் திடீரென்று சொல்லி விட்டாள். இது வருத்தப்பட்டுக்கொண்டு வந்திருக்

கும் பரதன் துக்கத்தை திடீரென்று தூண்ட, அவன் மூர்ச்சைதெளிந்து எழுந்து, பரதன் வெகுவாக ப்ரலாபித்துவிட்டு, 'ராமருக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்து, ஆநந்தித்துவிட்டுப்போவார் தசரதர் என்றல்லவோ நான் எதிர்பார்த்திருந்தேன். அவர் இறக்குங்கால் அருகிலிருந்த ராமர் முதலியோரே க்ருதார்த்தர்கள்' என்று வாய்விட்டலறிவிட்டு, தசரதர் கடைசியாக என்ன சொன்னார், என்று பரதன் கைகேயியைக் கேட்டான். அப்பொழுது கைகேயி, தசரதர் 'ஹா ராமா! லக்ஷ்மணா! ஸீதே! நீங்கள் திரும்புவதைக் காண்பவரே மஹா புண்யவான்கள் என்று கதறிக்கொண்டு, இறந்ததாகச் சொன்னாள். இதைக் கேட்டதும, 'ராமலக்ஷ்மணர்கள் எங்கே போயிருக்கிறார்கள்' என்றுகேட்ட பரதனுக்கு,கைகேயி,தான்பரதனுக்காக, ராமர் முதலியோரைக் கூசாது 14-வருஷம் வநம் அனுப்பிவிட்டதாகவும், ராமரது பட்டாபிஷேக ஸாமான்களை வைத்துக்கொண்டு பரதனுக்குப் பட்டாபிஷேகத்தைச் செய்ய யத்தனிக்கையில், ராமரது பிரிவு ஆற்றாமையால் தசரதர் இறந்ததாகவும் சொல்லி, தன்னைப் பரதன் மெச்சிக்கொள்வான் என்று கைகேயி மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள்.

வினா 32.—இந்தக்கொடிய சங்கதியைக் கேட்டதும் பரதன் என்ன செய்தான்?

விடை.—இந்தக் கொடிய சங்கதியைக் கேட்டதும், பரதனுக்குத் துக்கம் ஒருபக்கம், கோபம் ஒரு பக்கம் வந்து பாதிக்கத் தொடங்கின. அந்யாயமாய் ராமர் காட்டிற்குச்சென்று தனக்காக வருந்துவி

றதும், தசரதரும் தன் காரணமாய் உயிரிழந்ததும், பரதனுக்கு அடங்காத் துக்கத்தை உண்டாக்கியது. தான் ஊரிலில்லாத வேளையில் தன்னைக் கேட்காது, தன் தாய், வீணாகத் தன் பேரை வைத்துக்கொண்டு அந்யாயமாய் இக்கொடிய செயல்களைச் செய்துவிட்டாளே என்ற கோபமே பரதன் மனதில் அத்தருணத்தில் அதிகமாய் இருந்தது. இக்கோபத்தால் கைகேயியை வாயில் வந்தபடி, தாய் என்று கூடக் கவனியாது வைதுவிட்டுப், பரதர் கடைசியாகத் தாயை நோக்கி, 'எல்லோருக்கும் ஹிதராயும், ஒரு குற்றமும் அறியாதவராயும், எங்களுக்கெல்லாம் நடுநாயகம்போல் விளங்கிக் கொண்டிருந்த ராமபிரானை, ஏ நாசகாரி! நீ ஏன் இவ்வாறு வருத்தி அதனால் என் பிதாவையும் கொல்லுவித்தாய். அடி பாவி! நீ எண்ணியபடி ஒன்றும் நடக்கப்போவதில்லை. தசரதரது கர்மாதிகள் முடிந்ததும் நானே என் தமயனிடம் சென்று, நடந்தவிஷயங்களைச்சொல்லி அவரைத் திரும்பி அழைத்துவந்து அவரையே இவ்வூர் அரசனுக்குவேன். இளையவனாகிய எனக்கு, ராமரைத் தூரத்திவிட்டு ராஜ்யமாளவேண்டுமென்ற துராக்ரஹம் ஒருநாளும் வாராது. நான் ஒருநாளும் இந்த ராஜ்யத்தை ஆளப்போகிறதில்லை என்று இப்படிக் கடிந்து பேசிவிட்டுப் பரதர் கௌஸல்யையைத் தேற்றிவருவதற்காக அவள் இருப்பிடஞ் சென்றார்.

வினா 33.—பரதர் எவ்வாறு கௌஸல்யா தேவியைத் தேற்றினார்?

விடை.—கௌஸல்யை பரதரைக்கண்டதும் மூர்ச்

சையாய் விழுந்து, தெளிந்து எழுந்து துக்க மிகுதியால், பரதரது நல்ல குணத்தை அறியாதவளாய், வாயில் வந்தபடி எல்லாம் கைகேயியைப் பழிப்பதோடுங்கூட, பரதனை நாக்கில் நரம்பில்லாது பழித்துவிட்டாள். பரதர் மனதை, இவ்வார்த்தைகள் மிகவும் புண்படுத்த, வெகுவாகப் பரதர் ப்ரலாபித்துவிட்டுக் கடைசியில் வெகு விஸ்தாரமாகச் சபதாதிகள் செய்து, தன் நல்ல எண்ணத்தைக் கௌஸல்யை நன்றாய் அறியும்படி வெளியிட்டார் அவர், 'நான் ராமபிரானது வநவாஸத்தை மனதார ஒப்புக் கொண்டவனேயானால், உலகில் கொடிய பாபங்கள் செய்தவர்கள் எந்தக் கொடிய நரகத்தில் பலகாலம் வருந்துவார்களோ, அதில் நான் ஸூர்ய சந்திரான் உள்ள அளவும் கிடந்து கஷ்டப்படுவேன்' என்று இதுபோன்ற உறுதிமொழிகளை வெகு பரபரப்போடு சொல்ல, கௌஸல்யைக்குத் தான் பரதரை வைதது மாத்ரம், கொடிய அபராதம் என்று பட்டது. கௌஸல்யை பரதரைப் பின்பு மனதார வாழ்த்தினாள். இவ்வாறு துக்கித்துக் கொண்டே கௌஸல்யையோடு பரதர் அன்றிரவு முழுவதையும் போக்கினார்

வினா 34.—மறுநாட்காலை முதல் என்னென்ன அயோத்யையில் நடந்தன ?

விடை.—மறுநாட் காலையில் வஸிஷ்டர் வந்து பரதரைத் தேற்றித் தசரதருக்கு மேல்நடக்கவேண்டிய கர்மங்களை ஆரம்பித்து, முதலில் தசரதரது தேஹத்தைத் தைலத்திலிருந்து எடுத்து, சக்ரவர்த்திகளுக்கு நடக்கவேண்டிய முறைப்படி ஸகல கர்மங்களையும்

நடத்தி, தசரதர் தேஹத்தைப் பரதர் மூலமாய்த் தஹநம் செய்துவைத்தார். பின்பு 12-நாள் நடக்கவேண்டிய க்ரியைகளும் க்ரமப்படி நடந்தேறின.

வினா 35.—இவ்வாறு க்ரியைகள் நடந்தேறியதும் என்ன வேடிக்கை நடந்தது ?

விடை.—பரத சத்ருக்நர்கள் ராமனைப்பற்றி எண்ணித் துக்கித்துக்கொண்டிருக்கையில், அவர்களுக்கு எதிரில் ஆடையாபரணாலங்க்ருதையாய் கூனி வந்து நின்றாள். இவளைக் கண்டதும் பரதருக்குக் கோபம் வர, சத்ருக்நா ! இவள்தான் நமது குலத்தை இவ்வளவு அலங்கோலப்படுத்திய பாபி. நீ இவளை உன்னிஷ்டம்போல் கஷ்டப்படுத்தலாம், என்று அனுமதி கொடுத்தார் இதைக் கேட்டதும், சத்ருக்நர், கூனிமேல் அதிக கோபத்தோடு ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, அவளைத் தள்ளி காலால் உதைத்து, கையைப்பிடித்து, அந்த உள்முழுவதும் காகா என்று இழுத்து, அவளை மிகவும் கஷ்டப்படுத்தத் தொடங்கினார். கூனியுடன் வந்த தாதிமார் கௌஸல்யை இடம் சென்று, கூனி சத்ருக்நரால் படும்பாட்டைச் சொல்லி முறையிட்டார்கள். இதற்குள் பரதரே சத்ருக்நரை அடக்க, கூனி பிழைத்தாள்.

வினா 36.—கர்மங்கள் யாவும் முடிந்த பின்னர் 14-ம் நாள் காலையில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—வஸிஷ்டர் முதலிய மஹாரிஷிகளும், அயோத்யா நகரவாஸிகளும், பட்டாபிஷேக த்ரவ்யங்களை ராஜஸபையில் தயார் செய்துவைத்துக்கொண்டு பரதரை அழைத்து, கோஸல ராஜ்யத்தை ஒப்புக்

கொண்டு பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்படி வேண்டினார்கள். பரதர் மிகுந்த பரபரப்புடன் அந்த த்ரவ்யங்களை வலம்வந்து நமஸ்கரித்துவிட்டு, இந்த ராஜ்யம் ராமர் ஆளத்தகுந்தது; நான் அதை அங்கீகரிக்க யோக்யனல்லன். நான் கூடியசீக்ரத்தில் ராமர் இருக்குமிடம்சென்று, அவரிடம் நடந்த விஷயங்களையும் எனது அபிப்ராயத்தையும் சொல்லி அவரைத் திரும்பவும் அயோத்திக்கு அழைத்துவந்து ராஜ்யம் ஆளும்படி செய்வேன். இதற்குவேண்டிய உபகாரத்தை நீங்கள் எல்லோரும் எனக்குச் செய்யத் தயாராய் இருக்க வேண்டும். வநம் புறப்பட எல்லோரும் தயாராகலாம்' என்று மஹா விநயத்துடன் ஸபையோரை நோக்கி விண்ணப்பம் செய்துகொண்டார். இதைக் கேட்டதும் ஜநங்களுக்குப் பரதரிடம் இருந்த ப்ரீதி அதிகரித்துவிட்டது. அவர்களுக்கு ராமரைக் காணப்போகிறோம் என்ற உத்ஸாஹம் உண்டாக, எல்லோரும் ப்ரயாணத்திற்குத் தயாரானார்கள்.

வினா 37.—பரதர் முதலியோர் புறப்பட்டு எங்கு சென்று தங்கினார்கள்?

விடை.—பரதர் முதலியோரும், வஸிஷ்டர் முதலிய ரிஷி ச்ரேஷ்டர்களும், கௌஸல்யை முதலிய ராஜ ஸ்த்ரீகளும், மற்றுமுள்ள அயோத்யா நகர வாஸிகளும் ராமரைப் பார்க்கப்போகிறோம் என்ற ஸந்தோஷத்தோடு, வெகு கோலாஹலமாய்ப் புறப்பட்டுப் போகுங்கால், ஒருநாள் ஸாயங்காலம் குஹன் பட்டணமாகிய ச்ருங்கிபேரபுரத்தருகில் உள்ள கங்கா தீரம் வந்து சேர்ந்து தங்கினார்கள். குஹனுக்கு இவர்

களது நோக்கம் தெரியாததால், தனது பரிவாரங்களுக்கு ஒரு சண்டை உண்டானாலும், அதற்கும் தயாராய் இருக்கும்படி உத்தரவு செய்துவிட்டு, குஹன் பரதரிடம் வந்து மரியாதைகள் செய்துவிட்டு, அவரது நோக்கத்தை அறிவதற்காக அவரைச் சில கேள்விகள் கேட்டான். அவர் கொடுத்த பதிலிலிருந்து, பரதர் ராமரைத் திரும்பி அழைத்துவரவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் புறப்பட்டிருந்ததாக அறிந்து, அவரோடு தானும் ராமரைப் பார்க்க வருவதாகச் சொல்லிவிட்டு, மறுநாட் காலையில், வந்திருக்கும் கூட்டம் எல்லாம் கங்கையைக் கடப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளைக் குஹன் வெகு ஆவலோடும பாபரப் போடும் செய்யத் தொடங்கினான்.

வினு 38.—அன்றிரவு கங்கைக்கரையில் வேறு என்ன நடந்தது ?

விடை.—ராமர் இங்கு வந்திறங்கி, என்னென்ன செய்தார் என்று பரதன் குஹனைக் கேட்க, அவன், ராமர் ஓர் இரவு அருகாமையிலுள்ள மரத்தடியில் ஸீதையோடு உறங்கிவிட்டு, மறுநாட் காலையில் எழுந்து தலைமயிரை ஜடை ஆக்கிக்கொண்டு, ரிஷிவேஷம் தரித்துப் பின்பு கங்கையைத் தனது ஸகாயத்தால் தாண்டிய கதையை விஸ்தாரமாய்ச் சொன்னான். இதைக் கேட்டதும், பரதருக்கு அடங்காத்துக்கம் வர, மூர்ச்சையடைந்து கீழே விழுந்துவிட்டார். இதை அறிந்ததும், பரதர்மேல் ப்ரீதியோடிருந்த கௌஸல்யை முதலியோர் பரதருக்கு என்ன ஆபத்து வந்துவிட்டதோவென்று, அவர் ஸமீபம் வந்து தாங்கித்தூக்கிக்கொண்டிருக்

கையில்,பாதர் மூர்ச்சைதெளிந்து எழுந்து,ராமர் படுத்திருந்த மரத்தடிக்கு எல்லோரையும் கூட்டிக்கொண்டு போனார். அங்கு எல்லோரும் ஒருவாறு தூங்கிக, பாதர் ராமரோடு விடாது தொடர்ந்து, காட்டிலும் அவருக்கு ஸகாயமாயிருக்கும் ஸீதா லக்ஷ்மணர்களை மிகவும் கொண்டாடிவிட்டு, எப்படியாவது ராமரைத் திரும்ப அயோத்திக்கு அழைத்துவரும்படியான சக்தியைத் தமக்குக் கொடுக்கவேண்டும் என்று அந்த விடத்திலிருந்துகொண்டே ஸகல தேவதைகளையும் அவர் ப்ரார்த்தித்தார்.

வினா 39.—மறுநாட்காலையில் இவர்கள் எவ்வாறு கங்கையைக் கடந்தார்கள்? பின்பு என்ன செய்தார்கள்?

விடை.—மறுநாட் காலையில், பாதர் குஹனிடம் சத்ருக்நரை அனுப்ப, அவன் தனது பரிவாரங்களோடு வந்து ஓடங்களைக் கரையோரமாய் இழுத்து நிறுத்தினான். உடனே பாதர் முதலியோர் ஓடங்களில் ஏறி, கங்கையைக் கடந்தார்கள். அக்கரை சேர்ந்ததும், பாதர் குஹன் முதலியவர்கள் தமது பரிவாரங்களோடு கங்கா யமுநா ஸங்கமத்திலிருக்கும் பரத்வாஜாச்ரமம் நோக்கிப் புறப்பட்டுக் கூடிய சீக்ரத்தில் அதன் அருகில் வந்து சேர்ந்தார்கள்.

வினா 40.—பரத்வாஜரைப் பாதர் எவ்வாறு கண்டார்? அங்கு பின் என்ன நடந்தது?

விடை.—பரத்வாஜாச்ரமத்தருகில் வந்ததும், பாதர் கால் நடையாய் வஸிஷ்டரை முன்னிட்டுக்கொண்டு பரத்வாஜர் அருகில்செல்ல, அவர் பாதரை ராமர் விஷயமாய் நடந்தவைகளைப்பற்றி விசாரித்தார். பர

தர் தாம் வநம் வந்திருக்கும் நோக்கத்தை வெளி யிட, வஸிஷ்டர் அது உண்மைதான் என்று எடுத் துரைத்தார். ராமருக்கு அநுகூலமாய்ப் பரதர் வந் திருப்பதைக் கேட்டதும், பரத்வாஜருக்கு மிகுந்த ஸந்தோஷம் உண்டாக, பரதரையும் வஸிஷ்டரை யும் தமது ஆச்ரமத்திலேயே போஜனாதிகளை வைத் துக்கொள்ளும்படி அவர் கேட்டுக்கொண்டார். அப் பொழுது தாம் அயோத்யா நகரவாஸிகளோடு வந் திருப்பதாகச் சொல்ல, எல்லோருக்கும் பரத்வாஜர் விருந்தளிப்பதாகச் சொல்லித் தமது தபோ மஹி மையால் அந்தக் காட்டில் பரதரோடு கூடவந்தவர் கள் எல்லோருக்கும் தகுந்தபடி தேவதைகள் மூல மாய்ப் போஜனாதிகளைக் கொடுத்து, த்ருப்தி வரும் படி செய்தார். ஒரு ராத்ரி பரதர் அங்கு தங்கிவிட்டு ராமர் சித்ரகூட பர்வதத்திலிருப்பதாகப் பரத்வாஜ ரிடமிருந்து அறிந்துகொண்டு, தமது பரிவாரங்க ளோடு சித்ரகூடமலையை நோக்கிப் புறப்பட்டார்.

வினா 41.—சித்ரகூடத்தருகில் வந்ததும் பரதர் என்ன செய்தார்?

விடை.—பரத்வாஜர் சொல்லிவிட்டபடி வழியைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு பரதர் சித்ரகூட பர்வ தம் வந்தார். உடனே தமது ஸேனைகளை ஓரிடத்தில் நிற்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, சிற்சில மனுஷ் யர்களை ராமர் இருக்கும் இடத்தைத் தேடிப்பார்த்து வரும்படி அனுப்பினார். போனவர்களில் சிலர், மலைச் சாரலில் புகை மேலே எழும்புவதைக்கண்டு, பரத ரிடம் வந்து தாம் கண்டதைச் சொன்னார்கள். உட

னை பரதர் ஸேனைவிட்டுக் கீழே குதித்து, ஸேனை களைத் தாம் வரும்வரையில் அங்கேயே இருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுப் புகை வருமிடத்தை நோக்கிப் புறப்பட்டார்.

வினா 42.—பரதர் இவ்வாறு ராமரைத் தேடிவருங்கால், ராமர் அங்கு என்ன செய்து கொண்டிருந்தார்?

விடை.—ராமர் வெகு உத்ஸாஹத்தோடு வனங்களில் ஸீதையுடன் உலாவிக்கொண்டு, ஸீதைக்கு மலையின் காட்சி, கங்கையின் வீழ்ச்சி, முதலிய அற்புதக் காட்சிகளைக் காட்டிக்கொண்டுவந்து, ராஜ்ய ஸுகங்களை ஒரு பொருட்டாய் எண்ணுதவராய் கடைசியாய்த் தமது பர்ணசாலை அருகிலிருந்த ஒரு கல்லின்மேல் வந்து ஸீதையோடு உட்கார்ந்தார். இந்த ஸமயத்தில் ஸமுத்ரம் இரைவதுபோலப் பரதரது ஸேனையின் கோஷம் ராமர் காதில்பட்டது. மேலும் ஸேனைகளைக்கண்டு பயந்தோடும் ம்ருகங்களின் சப்தமும் ராமர் காதில் விழுந்தது.

வினா 43.—இந்தச் சப்தம் ராமர் காதில் விழுந்ததும் ராமர் என்ன செய்தார்? பின்பு என்ன நடந்தது?

விடை.—இந்தச் சப்தத்தைக்கேட்டதும் லக்ஷ்மணரை இதன் காரணத்தைக் கண்டறியும்படி ராமர் ஏவினார். அப்பொழுது லக்ஷ்மணர் ஒரு மரத்தின்பேரில் ஏறி, சுற்றுமுற்றும் பார்க்கையில் அவர் கண்ணில் பரதனது ஸேனை தோற்றியது. உடனே அவர் ராமரை நோக்கி, 'பரதன் ராஜ்யத்தைக் கைப்பற்றியது போதாதென்று, ஸேனையோடு நம்மைக் கொல்லவந்

திருக்கிறான் போலிருக்கிறது. ஆகையால் நீர் உமது வில்லை நாண்பூட்டி அம்பு எய்யத் தயாராய் இரும்,' என்று எச்சரிக்கைசெய்தார். அப்பொழுது ராமர், 'பரதன் நம்மைப்பார்த்து அயோத்திக்கு அழைத்துப்போகவேண்டும் என்ற எண்ணத்தோடு வந்திருந்தாலும் இருக்கலாம், நீ அவஸரப்படாதே' என்று லக்ஷ்மணரை ஸமாதானப்படுத்த அவர் ராமரிடம் வந்தார்.

வின 44.—புகை கிளம்பும் இடத்தை நோக்கி வந்த பரதர் என்ன செய்தார்?

விடை.—புகை கிளம்புவதைக் கண்ட பரதர், வஸிஷ்டர் முதலியோரைக் கௌஸல்யை முதலியவர்களைத் தாம் போகும் வழியே அழைத்துவரும்படி குஹன் ஸுமந்த்ரர் முதலியோருக்கு உத்தரவுசெய்து விட்டுத் தாம் அந்தப் புகைவரும் இடத்தை நோக்கி வேகமாய்ச் சென்றார். அதன் அருகில் சென்றதும், ராமர் ஒரு மஹா ரிஷியைப்போல ஜடாமகுடம் தாங்கி, மான்தோல்மேல் உட்கார்ந்திருப்பதைப் பரதர் கண்டார். உடனே அவருக்கு அடங்காத் துக்கம் வர, ஆவேசத்தோடு ராமரது பாதத்தில் வந்து விழுந்து, மூர்ச்சையடைந்தார்.

வின 45.—இவ்வாறு பரதர் வந்து தமது பாதத்தில் விழுந்ததும் ராமர் என்ன செய்தார்? மேல் என்ன நடந்தது?

விடை.—தமது பாதத்தில் வந்துவிழுந்த பரதரை, ராமர் அவஸரமாய்த் தூக்கி ஆச்வாஸப்படுத்தினார். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் பரதர் மூர்ச்சை தெளி

ந்து எழுந்திருக்க, அவரைநோக்கி மிகுந்த அன்போடு ராமர், தமது தகப்பனார், தாயார், தம்பிமார், வஸிஷ்டர் முதலிய குரு ச்ரேஷ்டர்கள், அயோத்யா நகரவாஸிகள் ஆகிய இவர்களது க்ஷேமத்தைப்பற்றி விஸ்தாரமாகக் கேட்டார். பரதர் கொஞ்சமேனும் தயங்காது, தசரதர் ராமரது பிரிவாற்றாமையால் பரம பதம் அடைந்தாரென்றும், அவர் போனபின்பு தம்மால் ராஜ்யபாரத்தை வஹிக்க முடியாதிருப்ப தால் ராமரை அயோத்திக்கு அழைத்துப்போய் ராஜ்யத்தை ஒப்புவிக்கத் தாம் வந்தது என்றும், மற்றப் படி அயோத்தியில் யாவரும ஸௌக்யம் என்றும் சொல்லிமுடித்தார். தசரதர் பரமபதம் அடைந்தார் என்ற ஸங்கதியைக் கேள்விப்பட்டதும் ராமர், லக்ஷ்மணர், ஸீதை ஆகிய இவர்கள் வெகுவாகத் துக்கித்துப் பிறகு, அருகிலிருந்த கங்கைக்கரைக்கு வந்து, தமது தகப்பனார் உத்தேசம் ஸ்நாந தர்ப்பணாதிகள் செய்து, பிண்டம் முதலியவைகளைப்போட்டு விட்டு, தமது ஆச்ரமம் வந்து உட்கார்ந்தார்கள்.

வினா 46.—இதற்குள் குஹன் ஸுமந்த்ரர் முதலியோர் என்ன செய்தார்கள்? அவர்கள் ராமரைத் தேடிவரும் வழியில் என்னென்ன நடந்தது?

விடை.—இவர்கள் வஸிஷ்டரிடம் கௌஸல்யை முதலியோரை அழைத்துவரும்படி பரதர் சொல்லிப் போன செய்தியைச் சொல்ல, வஸிஷ்டர் ராஜஸ்த்ரீகள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு, குஹன் ஸுமந்த்ரர் ஆகிய இவர்களை முன்னிட்டுக்கொண்டு ராமரது பர்ணசாலையை நோக்கிவந்தார். வரும் வழியில்

ராமர் கங்கைக்கரையில் தசாதருக்குப் பிண்டம் போட்டிருப்பதைக் கண்ணுற்ற கௌஸல்யை மிகவும் துக்கிக்கத் தொடங்கினள். இவ்வாறு இவர்கள் வருகையில் ராமர் இவர்களைக்கண்டு ஓடிவந்து, வஸிஷ்டர் பாதங்களில் முதலில் நமஸ்கரித்தார். இதற்குள் அயோத்யா நகரவாஸிகளும் ரிஷி ச்ரேஷ்டர்களும் அங்கு வந்து கூடினர்கள். அப்பொழுது அவர்கள் மனதில் பாதர் ராமரைநோக்கி என்னசொல்லப்போகிறார் பார்ப்போம் என்ற ஆவல் உண்டாக யாவரும் நிச்சப்தமாய்க் காத்திருந்தனர்.

வினா 47.—அப்பொழுது ராமருக்கும் பரதருக்கும் அங்கு என்ன ஸம்வாதம் நடந்தது? அது எவ்வாறு முடிவுபெற்றது?

விடை.—முதலில் பாதர் ராமரைநோக்கி, 'என் தாயார் அயோத்யா நகரத்தை என் தகப்பனரிடமிருந்து வாங்கி, என்னிடம் ஒப்புவித்துவிட்டாள். இப்பொழுது அது என்னுடையது. நான் உமக்கு அதைக் கொடுக்கிறேன். நீர் அதைப்பெற்றுக்கொண்டு திரும்பி வந்து அயோத்யையில் ஸுகமாய் அரசாளும். நீரே எங்களெல்லாரையும்விடப் பெரியவர். நீர்தான் அயோத்யை வந்து அரசாளவேண்டும்' என்று வெகு துக்கத்தோடு சொன்னர். உடனே ராமர் 'உலக வஸ்துக்களெல்லாம் அநித்யமாய் இருத்தலால், துக்கப்படுவதில் ப்ரயோஜனமில்லை. ஆகையால் நாம் துக்கப்படாது, நமது தகப்பனர் நமக்கு இட்டுப்போன கட்டளையை நடத்திவருவோம். என்னை அவர் காட்டில் 14-வருஷம் இருக்கச்சொன்னர். நான் அவர் சொல்லிற்கு விரோ

தமின்றி 14-வருஷம் காட்டில் வஸித்துவிட்டுத்தான் வரப்போகிறேன். நான் வரும்வரை அயோத்தியை ஆளும்படி அவர் உனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவ்வாறே நீ வீண் துக்கப்படாமல் செய்' என்று மறு மொழி கூறினர். அதற்குப் பரதர், 'நீரோ சிறந்த நற்குணங்கள் வாய்ந்தவர். நீர் இந்தப்படி காட்டில் வருந்தலாகாது. நான் இல்லாத ஸமயத்தில் பாபியான என் தாய் செய்த வேலையை நான் கொஞ்சமேனும் ஒப்பவில்லை. தசரதர்கூட மனதார உம்மைக் காட்டிற்கு அனுப்புவித்தார் என்று எண்ணுகிறீர்? 'கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே' என்றபடி அல்லவோ அவர் மதிமயங்கிச் சொல்லியிருக்கிறார். நீர், தகப்பனர் அறியாது சொன்ன விஷயங்களைப் பாராட்டாது, அவரது உண்மைக் கருத்தின்படி நடந்து அவரை மேன்மைப்படுத்தும். நாங்கள் யாவரும் நீர்வந்து அரசாண்டால்தான் பிழைப்போம். மேலும் க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்து உலகத்தவருக்கு நன்மை செய்ய வேண்டும் வயதில்,நீர் ஏன் இவ்வாறு ரிஷி வேடம் தரித்து, வநவாஸம் செய்யவேண்டும்? இது க்ஷத்ரியருக்கு அடுக்குமா? வயதுசென்ற பின்பல்லவோ நீர் இவ்வாறு செய்யவேண்டும். ஆகையால் நான் இங்கேயே வஸிஷ்டரைக்கொண்டு உமக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கிறேன். நீர் சீக்ரம் அயோத்திக்குத் திரும்பும்' என்று வெகு ஆவலோடு ராமரை நோக்கிக் கூறினர். அதற்கு ராமர், 'நீ தசரதருக்குக் கைகேயியினிடம் பிள்ளையாய்ப் பிறந்திருப்பதாலேயே உனக்கு இந்த ராஜ்யத்திற்குப் பாத்யதை உண்டு. கைகேயிக்கு

முன்னமேயே ராஜ்யம் தருவதாக நமது தகப்பனர் சொல்லியிருக்கிறாராம். மேலும் சம்பராஸுர யுத்தத்தில், அவளுக்கு அவர் இரண்டு வரம்கொடுத்திருக்கிறாராம். அவ்விரண்டு வரங்களை இப்பொழுது கைகேயி கேட்டாள். ஆகையால் தகப்பனர் வார்த்தையை நான் பொய்யாக்கக் கூடாது. நீ சீக்ரம் போய் அயோத்யையில் அரசாளவேண்டும், நான் ஸீதை முதலியவரோடு தண்டகாரண்யம் போவேன்' என்று மறுமொழி கூறினர்.

வினு 48.—இவ்வளவு உறுதியாயிருந்த ராமனை, யார் எவ்வாறு திருப்பப் பார்த்தது? அது என்ன வாய் முடிந்தது?

விடை.—இவ்வளவு உறுதியாய் இருக்கும் ராமனை, வழிக்குக்கொண்டுவரவேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் ஜாபாலி என்ற மஹரிஷி அப்பொழுது ராமனைநோக்கி, 'உலகில் தகப்பனுவது, தாயாவது, என்னவோ ஜனங்கள் கொஞ்சகாலம் உயிரோடிருந்து இறக்கிறார்கள்; அவ்வளவுதான் நமக்குத் தெரியும். பின் என்ன வருமோ நமக்குத் தெரியாது. ச்ராத்தாதி தர்ப்பணங்கள் எல்லாம் வீணே. இறந்தவன் வந்து சாப்பிடுகிறானு? ஜநங்கள் தயை முதலிய நற்குணங்களோடு இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் புத்திமான்கள்,இந்த விஷயங்களை ஏற்படுத்தினர்களேயொழியவேறில்லை. ஆகையால் மஹரிஷிகள் புத்திமான்கள் ஆகிய இவர்களது அபிப்ராயப்படி, இறந்தபின் நாம் தகப்பன் சொல்லுக்கு விரோதமாய் நடந்தால் என்ன கேடுவருமோ என்றபயத்தைவிட்டு, பரதாதுவேண்டு

கோளிற்கு இசைந்து அயோத்திக்குத் திரும்பி வாரும்' என்று நாஸ்திகவாதம் செய்துபார்த்தார். இந்த விதமான வேதவிரோத வாக்யங்களைக் கேட்டதும், ராமருக்கு அடங்காக் கோபம் வர 'ஐயா ரிஷியே! நீர் வேஷத்தில் மாத்ரந்தான் ரிஷிபோல் இருக்கின்றீர். நீர் சொல்லிய வார்த்தைகள் ஒன்றும் வேத ஸம்மதமாய்க் காணப்படவில்லையே! உலகத்தில் எல்லாம் ஸத்யத்திற்குக் கட்டுப்பட்டே நடக்கிறது என்ற உண்மையை அறியாது, என்னை நாஸ்திகம் சொல்லித் தகப்பனார் வார்த்தைக்கு விரோதமாய் நடக்கும்படி செய்ய எண்ணிய உம்மையா, என் தகப்பனார் குருவாக அங்கீகரித்தார்? இம்மாதிரியான நாஸ்திகனோடு பேசுவதே மஹா பாபம்" என்று ஜாபாலியைப் பலவாறு கப் பழிக்க அவர் வாயை மூடிக்கொண்டார். உடனே வஸிஷ்டர்முன் வந்து, ஜாபாலி உண்மையில் நாஸ்திகர் அல்ல என்றும், அவர் ராமரை எப்படியாவது மாற்றி அயோத்திக்குத் திருப்பவேண்டும் என்ற ஆவலோடு நாஸ்திகம் சொன்னாரென்றும் ஜாபாலியின் உட்கருத்தை வெளியிட்டு, கடைசியாய்த் தாம் ராமருக்கு ப்ரஹ்மாமுதல் ராமர் வரையுள்ள வம்சபரம்பரையைச் சொல்லி, 'இக்ஷ்வாகுவம்சத்தில் முதல் பிள்ளைகள்தான் ராஜ்யமாளுவது. ஆகையால் நீர் அயோத்திக்குப் பரதன் சொல்லியபடி திரும்பிவந்து ராஜ்யத்தை ஒப்புக்கொள்ளும். மேலும் ஒருவன் தனது தாய் தகப்பன் குரு ஆகிய இவர்கள் சொல்லுகிறபடி, அவச்யம் கேட்க வேண்டும். உனது தாயாருக்கும் எனக்கும் அயோத்திக்குத் திரும்பிவிடவேண்டும் என்றுதான் எண்ணம்.

உன் தகப்பனரோ இங்கில்லை. ஆகையால் எங்கள் வார்த்தைப்படி நடந்தால், உனக்கு ஒரு பாபமும் வராது' என்று எடுத்துரைத்தார். தகப்பனர் இங்கு இல்லாதபடியால்தான் நான் இப்பொழுது அவர் சொல்லுக்கு விரோதமாய் நடக்கமாட்டேன்' என்று ராமர் உறுதியாய் மறுமொழி கூறிவிட்டார்.

வின 49.—இவ்வாறு ராமர் மாறுததுகண்டு பரதர் என்ன செய்தார்? பின் என்ன நடந்தது?

விடை.—இவ்வுறுதியைக்கண்டதும் பரதர் தாமே தர்ப்பத்தைக் கீழேபரப்பிக்கொண்டு ராமர் அயோத்திக்குத் திரும்பி வரும்வரை, கீழே அங்கேயே பட்டினியாகக் கிடப்பதாகப் பிடிவாதமாய்த் தர்ப்பத்தின்மீது படுத்துவிட்டார். அப்பொழுது ராமரைநோக்கி அயோத்யா நகர வாஸிகள் எல்லோரும், பரதர் சொல்வதும் ந்யாயமாயிருக்கிறது. ராமர்சொல்வதும் ந்யாயமாயிருக்கிறது என்று தமது ஸந்தேகத்தை வெளிப்படுத்தினர். உடனே பரதர் எழுந்து, 'நான் இந்த ராஜ்யத்தை ஒத்துக்கொள்ளமாட்டேன். இந்த ராஜ்யத்தை எனக்கு வாங்கிக்கொடு என்று நான் என் தாயாரைக் கேட்கவும் இல்லை. ஆகையால் நானும் ராமரோடு 14-வருஷம் காட்டில் வஸிப்பேன்' என்று கூறினர். அதற்கு ராமர் ' நான் தகப்பனர் சொற்படிதான் நடப்பேன். நீயும் அவ்வாறேதான் நடக்கவேண்டும்' என்று சொன்னர். இதற்குள் இந்த வேடிக்கைகளைப் பார்க்க ஆகாயத்தில் கூடியிருந்த ஸித்தர்களும், ரிஷிகளும், தேவர்களும், 'ராமர் சொல்வதே ந்யாயம்' என்று சொல்லிவிட்டுத் தமது இருப்பிடம் சென்றனர். இதைக்

கேட்டதும் பரதர், 'நீர் இந்த ராஜ்யத்தை ஒப்புக்கொண்டு இதைப் பின்பு யாரிடமாவது ஒப்புவியும்' என, ராமர், 'நான் ஒன்றும் என் தகப்பனார் கட்டளைக்கு விரோதமாய்ச் செய்யமாட்டேன்,' என்றார். உடனே பரதர் 'உமது காலிலிருக்கும் பாதுகைகளையாவது கொடும், அவைகளை வைத்துக்கொண்டு நான் அயோத்யாநகரத்தை ஆள வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்' என ராமர் அவ்வாறே செய்தார்.

வினா 50.—இவ்வாறு ராமரிடம் பரதர் பாதுகைகளைப் பெற்றுக்கொண்டு என்ன செய்தார்?

விடை.—ராமரது பாதுகைகளைத் தமது சிரஸின் மேல் தாங்கிக்கொண்டு, ராமரை நோக்கி, 'நான் இவ்வாறே ஜடை தரித்துக்கொண்டு அயோத்திக்கு வெளியிலேயே இருந்து, இந்தப் பாதுகைகள் மூலமாய் ராஜ்ய கார்யங்களை நடத்திவருவேன். நீர் ஸரியாகப் பதினான்காம் வருஷம் முடிந்ததும், நான் இருக்குமிடம் வந்துசேர வேண்டும், இல்லாவிடில் நான் அக்நிப்ரவேசம் செய்திறப்பேன்.' என்று தமது மனஸின் எண்ணத்தை ராமருக்கு வெளியிட்டு, அவரிடம் விடைபெற்று, அயோத்யைநோக்கிப் புறப்பட்டார். மற்றைப் பரிவாரங்களும் ராஜஸ்த்ரீகளும் ராமரிடம் விடைபெற்றுத் திரும்பிவிட்டார்கள். வரும் வழியில் பரதர் நடந்த விஷயங்களை ஆதியோடந்தமாகப் பரத்வாஜரிடம் சொல்லிவிட்டு, ச்ருங்கிபேரபுரத்தில் ஒரு நாள் தங்கிப், பின்பு அயோத்யாநகரம் வந்துசேர்ந்தார்.

வினா 51.—அயோத்திக்கு வந்ததும், பரதர் என்னென்ன செய்தார்?

விடை.—பரதர் அயோத்திக்கு வந்து, கௌஸல்யை முதலிய ராஜஸ்த்ரீகள் ஸுகமாய் அங்கிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, தாம் வஸிஷ்டரை முன்னிட்டுக்கொண்டு அயோத்திக்கு வெளிப்புறமுள்ள நந்திக்ராமம் சென்று ராமரது பாதுகைகளுக்கு வெகு கோலாஹலமாய்ப் பட்டாபிஷேகம் செய்து, அவைகளையே ராமராகப் பாவித்து, அவைகள் முன்னர், ஸகல விஷயங்களைச் சொல்லித் தாம் ஒரு மந்த்ரி ஸ்தானத்திலிருந்து ராமரது வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு ராஜ்ய கார்யங்களை நடத்தத்தொடங்கினர்.

வினா 52.—பரதர் இவ்வாறு அயோத்தி சென்றதும், ராமர் என்ன செய்தார்?

விடை.—சித்ரகூடத்தில் வஸித்த சிலரிஷிகளிடமிருந்து, அருகிலுள்ள ஜநஸ்தாநம் என்ற இடத்திலிருக்கும் கரன் என்ற அஸுரனது பரிவாரங்களால் அவர்களுக்குக் கஷ்டங்கள் உண்டாவதாகத் தெரிந்துகொண்டு, தண்டகாரண்யத்தில் புகுந்து ஜநஸ்தானத்திற்குப் போகவேண்டும் என்ற எண்ணத்துடன் ராமர் புறப்பட்டார். மேலும் சித்ரகூடத்தில் பரதன் வந்தது போல், வேறு நகரவாஸிகள் அவ்விடத்தில் வருவார்கள்; அடிக்கடித் தமக்குப் பரதன் முதலியோர் ஞாபகம் வந்துகொண்டிருக்கும் என்ற எண்ணங்களும் ராமரை உடனே தண்டகாரண்யம் போகும்படிச் செய்தன.

வினா 53.—ராமர் புறப்பட்டுப் போகையில் முதலில் எங்கே தங்கினர்? அங்கு என்ன நடந்தது?

விடை.—ராமர் வநம் நோக்கிப் போகையில் அத்ரி மஹரிஷியின் ஆச்ரமம் வந்துசேர்ந்தார். ரிஷி இவருக்குத் தகுந்த மர்யாதைசெய்து; தமது பெண் சாதியாகிய அநஸூயையிடம் ஸீதையைப் போகும் படி செய்தார். அநஸூயையின் வேண்டுகோளின் படி, ஸீதை, தன்னை ராமர் கல்யாணம் பண்ணிக்கொண்ட வைபவத்தை விஸ்தாரமாய்ச் சொன்னாள். அநஸூயை ஸீதையைச் சந்தனம் முதலிய நல்லவஸ்துக்களால் அலங்காரம் செய்து, கண்குளிரப் பார்த்தாள். ராமர், ஸீதை, லக்ஷ்மணர் ஆகிய இவர்கள் ஓர் இரவை அத்ரி மஹரிஷியின் ஆச்ரமத்தில் கழித்துவிட்டு, மறுநாட் காலையில் எழுந்து தண்டகாரண்யம் போகும் வழியையும், ராக்ஷஸர்கள் உபத்ரவத்தையும், அங்குள்ள ரிஷிகளிடமிருந்து தெரிந்துகொண்டு வநத்திற்குள் புகுந்தனர்.

3. ஆரண்ய காண்டம்

பேதி யாதுயிர் பேத வுருவம் பிறழ்விலா
ஓதி யோதி யுணருந்தொறு முணர்ச்சி யுதவும்
வேத வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா
ஆதி தேவ ரவரெம் மறிவினுக் கறிவரோ.

வினா 1.—ராமர் முதலியோர் தண்டகாரண்யம் புகுந்ததும் அவர்களுக்கு என்ன ஆபத்து வந்தது?

விடை.—இவர் தண்டகாரண்யம் புகுந்ததும், விராதன் என்ற ஒரு ராக்ஷஸன் ஓடிவந்து, ஸீதையின் அழகைக்கண்டு அவளைத் தூக்கிக்கொண்டு ஓடத் தலைப்பட்டான். இதைக்கண்ட ராமலக்ஷ்மணர்கள் மிகுந்த துக்கம் அடைந்து, பின்பு கோபாவேசங்கொண்டு விராதனைத் தமது பாணவேகத்தால் தடுத்துக் காயப் படுத்தினார்கள். விராதன் ஸீதையைக் கீழே விட்டு விட்டு, அதிக கோபத்துடன் ராமலக்ஷ்மணர்களை நோக்கி ஓடிவந்து அவர்களைத் தூக்கித் தன் தோளில் வைத்துக்கொண்டு, அவர்களைக் கொன்றுவிட்டு ஸீதையைப் பின்பு தூக்கிப்போகலாம் என்ற எண்ணத்துடன் காட்டிற்குள் ஓடத்தலைப்பட்டான். இதைக் கண்டதும், ராமருக்கு இக்கதி வந்ததே என்ற எண்ணத்தால் ஸீதைக்கு முன்னிருந்த துக்கம் அதிகரித்தது.

வினா 2.—ராம லக்ஷ்மணர்களைத் தூக்கிச்சென்ற விராதன் கதி என்னவாயிற்று?

விடை.—இவ்வாறு விராதன் ஓடுகையில், ராமலக்ஷ்மணர்கள் விராதனது கைகளை வெட்டிஎறிந்தார்கள். உடனே விராதன் கீழே விழுந்துவிட்டான். அப்பொழுது விராதனுக்குத் தனது பூர்வ ஞாநம் வர, ராமலக்ஷ்மணர்களைத் துதிசெய்து அவர்களை நோக்கி "நான் குபேர சாபத்தால் இக்கதியை அடைந்த ஒரு கந்தர்வன். உங்களால் நான் மடிந்த உடன், எனக்குச் சாபந்தீரும்" என்று குபேரன் சொன்னான். நான் ஒரு ஆயுதத்தாலும் இறக்கக்கூடாது என்று ப்ரஹ்மதேவனிடம் வரம்பெற்றிருக்கிறேன். எனக்கு உங்கள் கையால் இறக்கவேண்டும் என்று மிகுந்த ஆவல். ஆகையால் ஒரு பெரிய குழியைத் தோண்டி என்னை அதனுள் இட்டு மண்ணால் மூடிவிடுங்கள். நான் சீக்ரத்தில் உங்களது மேன்மையால் நல்ல கதி அடைவேன்" என்று சொல்லி, அருகில் சரபங்கர் என்ற ஒரு மஹாத்மா இருப்பதாகவும், ராமர் காட்டில் வஸிக்கும் விஷயத்தில் அவருக்கு உபகாரம்செய்வார் என்பதாகவும், ராமருக்குத் தெரிவித்தான். இதைக் கேட்டதும், ராமர் முதலியோர் விராதனைக் குழியிலிட்டு மூடிவிட்டு, ஸீதையை அழைத்துக்கொண்டு சரபங்காச்ரமம் நோக்கிப் போயினர்.

வினு 3.—சரபங்காச்ரமத்தில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—சரபங்காது ஆச்ரமத்தருகே வருகையில், ராமர், ஆகாசத்தில் இந்த்ர விமானங்கள் நிற்பதைக் கண்டு ஸீதைக்கு அவைகளைக் காட்டிவிட்டு,

லக்ஷ்மணரையும், ஸீதையையும் வெளியே நிறுத்திவிட்டுத் தான் மாத்ரம் ஆச்ரமத்துள்ளே ப்ரவேசித்தார். இதை அறிந்த இந்த்ரன், ராவண ஸம்ஹாரத்திற்கு முன்னதாக ராமரைப் பார்ப்பது தகுதியல்லவென்று எண்ணி, சரபங்கரிடம் விடைபெற்றுத் தன் லோகம் நோக்கிச் சென்றான். பின்பு ஸீதையும், லக்ஷ்மணரும், ராமரிடம் வந்துசேர எல்லோரும் சரபங்கரைத் தர்சித்தார்கள். இவர்களைக் கண்ட மாத்ரத்தில் சரபங்கர் பரவசமாகி. 'இப்பொழுது இந்த்ரன் வந்து, ப்ரஹ்மலோகம் முதலிய லோகங்களை நான் தபோமகிமையால் ஜயித்துவிட்டதாகவும். அதற்கு ப்ரஹ்மா என்னை அழைத்துவரச் சொன்னதாகவும் சொன்னான். நான் அவைகளை மறுத்துவிட்டுப் பரமபதத்தையே அடைய வேண்டுமென்ற ஆவல் கொண்டிருக்கிற என்னைக் காத்தருள, ராமா! நீர் வந்துவிட்டீர். இப்பொழுது, உமக்கு எனது தபஸ் புண்யம் முதலியவைகளை அர்ப்பணம் செய்துவிடுகிறேன். இதனால் நான் க்ருதார்த்தனாகிப் பின்பு அக்நி ப்ரவேசம்செய்து பரமபதம் அடைவேன்' என்று உறுதியாய்ச் சொல்லி அக்நியைத் தயார்செய்து ராமர் முதலியோரது முன்னிலையில் சரபங்கர் தீயில்மூழ்கிப் பரமபதம் அடைந்தார்.

வினா 4.—இவ்வாறு சரபங்கருக்கு நற்கதி அளித்துவிட்டு ராமர் எங்குச் சென்றார்? அங்கு என்ன நடந்தது?

விடை.—சரபங்கர் தீயில் மூழ்கும் முன், இவர்களுக்குச் சொல்லியிருந்தபடி ஸுதீக்ஷ்ணரது ஆச்ர

மத்தை இவர்கள் அணுகினார்கள். ஸுதீக்ஷ்ண ரிஷி இவர்களை எதிர்கொண்டழைத்துத் தமது ஆச்ரமத்திலேயே வநவாஸம் முடிகிறவரையில் இருக்கும்படி சொல்ல, அதற்கு ராமலக்ஷ்மணர்கள் இசையாமல், ஓர் இரவு அங்கு தங்கிவிட்டு, அங்கு தம்மைப் பார்க்க வந்த ரிஷிகளுக்கெல்லாம், அவர்களை உபத்ரவப் படுத்தும் ராக்ஷஸர்களைத் தாமே ஸம்ஹரிப்பதாகச் சபதம் செய்துகொடுத்தார். இதன்பின்பு ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, காட்டைநோக்கிப் புறப்படுகையில், ஸீதை ராமனை நோக்கி, ரிஷிவேஷத்தோடு வநவாஸம் செய்யவந்த காலங்களிலும் ஸதா ஆயுதபாணியாக இருந்தால், மனதில் கோபம் முதலியவைகள் உண்டாகி, சும்மாவிருக்கும் ராக்ஷஸர்களையும் வருத்தும்படியான எண்ணம் வரலாம், அது வராமல் காத்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு வந்தால், மிகுந்த கேடுகள் விளைந்தாலும் விளையும்' என்று எச்சரிக்கைசெய்தாள். இதன் நோக்கத்தை ராமர் தெரிந்துகொண்டு, அகஸ்த்யாச்ரமத்தை நோக்கிச் சென்றனர்.

வினா 5.—இவர்கள் அகஸ்த்யாச்ரமம் சென்றதும் அங்கு என்ன நடந்தது?

விடை.—ராமனைத் தர்சித்தால் நலமாயிருக்கும் என்று நெடுங்காலமாய் எண்ணமிட்டுக்கொண்டிருந்த அகஸ்த்யரை நோக்கி ராமர் வந்தது, 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல்' மிகுந்த ஸந்தோஷமுண்டாக, அவர் ராமருக்கு வேண்டிய மர்யாதைகளைச் செய்து தமது ஆச்ரமத்தில் ஓர்

இரவு அவரை வைத்துக்கொண்டிருந்தார். மறு நாட் காலையில், ராமருக்குத் தம்மிடமிருந்த திவ்ய தநுஸ், அம்பறாத்தூணி, பாணங்கள் முதலியவைகளைக் கொடுத்து, கொஞ்ச தூரத்திற் செல்லாம் கோதாவரி தீரத்தில் பஞ்சவடி என்றொரு திவ்ய ஸ்தல மிருக்கிறதென்றும், அதுவே அவர்களுக்குத் தகுந்த வாஸஸ்தானமென்றும் அகஸ்த்யர் சொன்னார். அவர்களுக்கு மேலும் பஞ்சவடி அருகிலிருக்கும் ஜநஸ்தானத்தில் காதூஷணாதிகள் ஆளுகைக்கீழ் 14,000 ராக்ஷஸர்கள் இருக்கிறார்களென்றும், அவர்கள் ரிஷிகளை வருத்தும் கொடியவர்களென்றும், அகஸ்த்யர் தெரிவித்தார். இவைகளைத் தெரிந்துகொண்டு ராமர் முதலியோர் பஞ்சவடியை நோக்கிப் புறப்பட்டார்கள்.

வினா 6.—பஞ்சவடியை நோக்கிப் போகையில் வழியில் அவர்கள் யாரைக்கண்டார்கள்? அங்கு என்ன நடந்தது?

விடை.—போகும்வழியில் அவர்கள் ஜடாயு என்ற கழுகரசனைக் கண்டார்கள். அதை நோக்கி ராமர் 'நீ யார்'? என்று கேட்க, ஜடாயு, ப்ரஹ்மஸ்ருஷ்டி, ப்ரஜாபதியின் உற்பத்தி, முதலியவைகளை எடுத்துச் சொல்லி, தான் ஸூர்ய ஸாரதியாகிய அருணனது பிள்ளை என்றும், தனக்கு ஸம்பாதி என்ற அண்ணன் ஒருவன் உண்டென்றும், தான் தசரதரது ப்ராண ஸ்நேகிதன் என்றும் சொன்னது. உடனே ராமலக்ஷ்மணர்கள் ஜடாயுவுக்குத் தகுந்த மர்யாதை செய்து, ஸீதையை ஜடாயுவிடம் ஒப்புவித்து, ஜடாயுவோடு அவர்

கள் பஞ்சவடியை நோக்கிச்சென்றார்கள். ஜடாயுவும் பஞ்சவடியில் ஸீதையைக் காத்துவருவதாகச் சொல்லிப்போய், பஞ்சவடியருகில் ஓர் இடத்தில் வஸிக்கத் தொடங்கியது.

வினா 7.—பஞ்சவடி சென்றதும் ராமர் என்ன செய்தார்? அங்கு எவ்வாறு இவர்கள் வாஸஞ்செய்து வந்தனர்?

விடை.—பஞ்சவடி வந்ததும், ராமர் ஒரு திவ்யமான இடத்தில் கோதாவரியருகில் லக்ஷ்மணரைப் பர்ணசாலை ஒன்று கட்டும்படிசொல்ல, அவரும் அப்படியே கூடிய சீக்ரத்தில் செய்துமுடித்தார். அதில் அவர்கள் ஸுகமாய் வஸித்துவந்தனர். ராமலக்ஷ்மணர்கள் ஸீதையுடனே தினம் காலையில் எழுந்து, கோதாவரி சென்று, ஸ்நாநம் முதலிய காலக்கடன்களை முடித்துக்கொண்டு பர்ணசாலை வர, ஸீதை வீட்டுக் கார்யங்களைப் பார்ப்பதும் அப்பொழுது லக்ஷ்மணரும் ராமரும், அரிய விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதும், லக்ஷ்மணர் தினந்தோறும் வேண்டிய காய் கிழங்குகளைக் கொண்டுவந்துசேர்ப்பதும், ஆக இவ்வாறு ரிஷிகள்போல் இவர்கள் காலங்கழித்துவந்தனர். இவ்விதம் இவர்கள் ஸுகமாய் வாழ்ந்துவரும் நாளில், மழைகாலம் வந்துவிட்டது. அப்பொழுது இவர்கள், தமக்காகப் பரதன் அயோத்யையில் என்ன பாடுபடுவானோ என்றெண்ணிச் சில நாள் துக்கித்துக் கொண்டிருந்துவிட்டு, மறுபடி பழைய மாதிரியாகத் தமது காலத்தைக் கழிக்கத்தொடங்கினர்.

வினு 8.—இவர்கள் இவ்வாறிருக்கையில், யார் இவர்களிடம் வந்தது? வந்து என்னசெய்தார்கள்?

விடை.—ஒரு நாட் காலையில் ராமரும் லக்ஷ்மணரும் பேசிக்கொண்டிருக்கையில், ஸீதைக் கும் ஒழிவாயிருந்தபடியால், ராமர் அருகே அவள் வந்திருந்தாள். அந்த ஸமயத்தில், தற்செயலாய் அங்கு ஜநஸ்தானத்தில் வஸிக்கும்படியான ராவணனது தங்கை சூர்ப்பநகை வந்தாள். அவள் ராமரைப் பார்த்ததும், அவரைத் தனக்குக் கணவனுக்கிக் கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் அவளுக்கு உதிக்க, அவள் ராமரிடம் வந்து மிகுந்த அன்புடன் அவரது யோகக்ஷேமங்களை விசாரிக்கத் தொடங்கினுள். ராமர் அவளது உள்நோக்கத்தைத் தெரிந்துகொள்ளாது, தமது பூர்வ சரித்ரத்தைச் சுருக்கிச்சொல்லிவிட்டு, 'நீ யார்?' என்று அவளைக் கேட்டார். உடனே அவள், தன் அதிகாரத்தில் 14,000 ராக்ஷஸர்கள் கரதூஷணுதி ராக்ஷஸ வீரர்களால் ஆளப்பட்டு இருக்கின்றனர் என்று சொல்லி, தனது கருத்தை ராமரிடம் வெளியிட்டாள்.

வினு 9.—ராமர் உடனே என்ன செய்தார்? பின் என்னென்ன நடந்தன?

விடை.—ராமர், முன்னமேயே ஸீதை என்ற ஒரு பெண்சாதி தமக்கு இருக்கிறுளென்றும், அவளையும் கல்யாணஞ்செய்துகொண்டால், அவளுக்குச் சகளத்ர சண்டையால் ஒரு ஸௌகர்யமும் உண்டாகாதென்றும், பெண்சாதி இல்லாது வெகு ஏக்கங்கொண்டு தம் அருகிலிருக்கும் தமது தம்பி லக்ஷ்மணனை அவள்

புருஷனாகக் கொள்ளலாம் என்றும் எடுத்துச்சொல்லிச் சும்மா இருந்துவிட்டார். சூர்ப்பநகை இதை உண்மை தான் என்று நம்பினவளாய், லக்ஷ்மணரிடம் சென்று, அவர்மேல் தனக்கிருக்கும் காதலை வெளியிட, அவர் தாம் ராமரது அடிமை என்றும், தமக்கு அடிமையாகி வருந்துவதைவிட, ராமருக்குப் பெண்சாதியாகி சககளத்ரசண்டையில் அவதிப்பட்டாவது ஸுகிப்பதுமேல் என்றும், ராமருக்குக் கொஞ்சகாலத்தில் ஸீதையிடமிருந்த காதல்போக சூர்ப்பநகையின் அழகிற்கு அவர் ஈடுபடுவார் என்றும் பரிஹாஸமாகச் சொல்லிவிட்டார். இதுவும் ந்யாயந்தான் என்று எண்ணிக்கொண்டு ராமரிடம் வர, அவர் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, அவளை மறுபடியும் லக்ஷ்மணரிடம் அனுப்பினார்.

வினா 10.—இது எவ்வாறு முடிவுபெற்றது?

விடை.—இவ்வாறு 'எனக்கு வேண்டாம் பூசணிக்காய், எனக்கு வேண்டாம் பூசணிக்காய்,' என்றுபொத்துண்டு தள்ளப்பட்டு வருந்தும் சூர்ப்பநகைக்குக் கடைசியில் இவர்கள் இருவரும் தன்னோடு விளையாடுவதாகத் தெரியவந்தது. உடனே இவளுக்கு அதிகக்கோபம் வர, 'இந்த ஸீதையால் அல்லவோ எனக்கு இந்த அவமானம் வந்தது. இவள் இல்லாவிடில், இவர்களில் யாராவது என்னை மணம்புரிந்துகொண்டிருப்பார்கள். பார்! இந்த ஸீதையை ஒரே வாயில் விழுங்கிவிடுகிறேன்' என்று கர்ச்சித்துக்கொண்டு ஸீதையைப் பிடிக்க அவள் ஓடிவந்தாள். இதைக்கண்ட ராமர், காரியம் மிஞ்சிப்போகும் என்று எண்ணி, அவளை அவ

மானம்பண்ணி ஓட்டும்படி லக்ஷ்மணருக்கு உத்தரவு கொடுத்தார். உடனே லக்ஷ்மணர் தமது உடைவாளை உருவி சூர்ப்பநகையின் மூக்கையும் காதையும் அரிந்து விட, அவள் வலிபொறுக்கமாட்டாது அலறிக்கொண்டு வநத்துள் ஓடிப்போனாள்.

வின 11.—ஓடிப்போன சூர்ப்பநகை ராமருக்கு விரோதமாக என்னசெய்தாள்? அதெப்படி முடிந்தது?

விடை.—சூர்ப்பநகையோ தனது தமையனாகிய கானிடம் வந்து விழுந்து புரண்டு அழ, அவன் அவளைத் தேற்றினான். உடனே அவள் நடந்த ஸமாசாரத்தை ஆதியோடந்தமாகச் சொல்ல, கான் தன்னிடமிருந்த மஹா பலசாலிகளாகிய 14-ராக்ஷஸர்களை அழைத்துச் சூர்ப்பநகையோடு சென்று ராமரைக் கொன்றுவரும்படி அனுப்பினான். இவர்களை அழைத்துக்கொண்டுபோய்ச் சூர்ப்பநகை ராமரைக்காட்ட, இவர்களுக்கும் ராமருக்கும் பெரும்போருண்டாயிற்று. கடைசியில் ராமர் தமது பாணங்களால் 14 பேரையும் வெகு லாகவமாய்க் கொன்றுவிட்டார்.

வின 12.—இவ்வாறு ஸகாயமிழந்த சூர்ப்பநகை என்ன செய்தாள் ? இதனால் என்ன விபரீதம் விளைந்தது.

விடை.—இவ்வாறு தனக்கு ஸஹாயமாக வந்த 14 பேரும் இறந்ததும், சூர்ப்பநகை கானிடம் வந்து நடந்தவைகளைச் சொல்ல, அவன் கோபாவேசங்கொண்டு தன் கீழிருந்த ராக்ஷஸர்களையெல்லாம் யுத்தத்திற்குத் தயாராகும்படி சொன்னான். இதற்குள் சூர்ப்பநகை 'ராமன் கேவலம் மனிதன், அவனைக் கொல்ல

மல்போனால் உன் பௌருஷம் இருந்தாலென்ன? போனாலென்ன?' என்று அவனது கோபத்தை மூட்டிவிட்டாள். உடனே ராமரோடு கான் சண்டைக்குப் புறப்பட்டான். ராக்ஷஸர்களுக்கு வழியில் அநேக அபசகுநங்கள் உண்டாயின. இவைகளைக் கவனியாது, அவர்கள் பஞ்சவடி வந்துசேர்ந்தனர். சூர்ப்பநகையால், ராமருக்கும் 14,000 ராக்ஷஸர்களுக்கும் அப்பொழுது பெரிய யுத்தம் நடந்தது.

வினு 13.—அப்பொழுது யுத்த விஷயமாய் ராமர் என்ன ஏற்பாடு செய்தார்? வேறு என்ன ஏற்பாடு நடந்தது?

விடை.—ராமர் ஸீதையை லக்ஷ்மணரிடம் ஒப்புவித்து, அவரை ஆயுதபாணியாக இந்த யுத்தம் முடியும் வரை அவளை ஒருபுறமாய் இருந்த மலைக்குகையில் வைத்து வெகு ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடுசெய்துவிட்டுத் தாம் வில் அம்பறாத்தூணி முதலியவைகளை எடுத்துக்கொண்டு யுத்தத்திற்குத் தயாரானார். ராமர் ஒருவராய் 14,000 ராக்ஷஸர்களை வெல்லும் வைபவத்தைக் கண்டு ஆநந்திக்க, ஆகாயத்தில் தேவதைகள், ஸித்தர்கள், மஹரிஷிகள் முதலிய எல்லோரும் வந்து கூடினர்.

வினு 14.—அப்பொழுது ராமருக்கும் கான் முதலியவர்களுக்கும் எவ்வாறு யுத்தம் நடந்து முடிவு பெற்றது?

விடை.—ராமரை, கரனது ஸேனை நான்கு பக்கங்களிலும் வந்துதாக்க, கொஞ்சகாலம் அவர்களோடு அவர் யுத்தம் செய்துவிட்டு, கடைசியில் அவர்களை

வரிசையாகக் கொன்றுதள்ளினர். இவ்வாறு ஸேனைகள் மடியும் கொடுமையைக்கண்ட ஸேநாபதியாகிய தூஷணன் ராமரோடு யுத்தத்திற்கு வந்தான். அவனையும் ராமர் சீக்ரத்தில் வெட்டிச்சாய்த்தார். இதன் பின்பு கரனே யுத்தத்திற்கு வர எண்ணுகையில், த்ரிசிரஸ் என்ற ராக்ஷஸன், தான் முன்பு ராமரோடு யுத்தஞ்செய்வதாகவும், தான் இறந்தால் பின்பு கரன் ராமரை எதிர்க்கலாமென்றும் சொல்லிவிட்டு, யுத்தத்திற்குப் புறப்பட்டுப்போய், அவனும் சீக்ரத்தில் ராமபாணத்திற்கு இரையானன். இதைக்கண்டு மனதில் கரனுக்குப் பயம் தோன்றியபோதிலும், வீரனுகையால் ராமரை எதிர்ப்பதில் முன்னேக்கிச் சென்று அவரோடு போர்செய்யத் தொடங்கினன். இதில் கரன், ராமர் வில்லை, அவர் பிடித்திருந்த இடத்தில் வெகு லாகவமாய் வெட்டிவிட்டான். உடனே ராமர் அகஸ்த்யர் கொடுத்திருந்த வில்லை எடுத்து, கரனை வருத்தத் தொடங்கி, அவனைத் தரையில் நிற்கும்படி செய்து, அவனது வில்லையும் ஒடித்துவிட்டார். அப்பொழுது கரன் கோடாலி, பனைமரம் முதலியவைகளை ராமர்மேல் எறிய, அவர் அவைகளை வெகு லகுவாய் சின்னபின்னப்படுத்தினர். உடனே கரன், ராமரைப் பிடித்துக் கட்டிவிடலாம் என்று எண்ணி, வெகுவேகமாய் ஓடிவர, ராமர் மூன்று அடி பின்னே நடந்து கரனைத் தமது ஒரே பாணத்தால் கொன்று கீழே தள்ளிவிட்டார். இவ்வாறு ராமர் ஒரு முகூர்த்தகாலத்துக்குள் கரனது 14,000-ராக்ஷஸர்களை இருந்தவிடம் தெரியாமல் ஸம்ஹரித்துவிட்டு, ஸீதை லக்ஷ்மணர்

ஆகிய இவர்களோடு தமது பர்ணசாலையுட் புகுந்தார். தேவதுந்துபிகள் ஆர்த்தன. ஆகாயத்தில் வந்திருந்தவர்கள் யாவரும் ராமரைப் புகழ்ந்துபாடித் தமதிருப்பிடம் சென்றனர்.

வினா 15.—யுத்த பூமியிலிருந்து யார் வெளியேறி யாருக்கு இந்த ஸமாசாரத்தைத் தெரிவித்தது? பின்பு என்ன நடந்தது?

விடை.—அகம்பனன் என்ற ஒரு அஸுரன் இவைகளைக்கண்டு, நடுங்கி ஓடிப்போய், ராவணனிடம், ஜநஸ்தானத்தில் கரனது ஸேனைகளுக்கு ராமரால் வந்த ஆபத்தைத் தெரிவித்தான். இதைக் கேட்டதும் ராவணன் ராமரைக் கொல்லவேண்டியதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய யத்தனிக்கையில், அகம்பனன், ராமரை ஒருவராலும் வெல்ல முடியாதென்றும், அவரைக் கொல்வதற்கு அவரது அழகிய பெண்சாதியாகிய ஸீதையைத் தூக்கிவந்துவிடுவதே நல்ல உபாயம் என்றும் புத்திமதி கூறினான். இது துராத்மாவாகிய ராவணனுக்கு நல்லவழி என்றுபட, உடனே தன் ஸ்நேகிதனும் தாடகையின் பிள்ளையுமாகிய மாரீசனிடம் வந்து, ஸீதையைத் தூக்கி லங்கைக்குக் கொண்டுவருவதில் தனக்கு ஸஹாயம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். முன்னமேயே விச்வாமித்ரர் யாகத்தில் ராமபாண மஹிமையை அறிந்து, அதுமுதல் ஸதா ராமஸ்மரணை பண்ணிவரும் மாரீசன், ராமரது வைபவத்தை ராவணனுக்கு எடுத்துச்சொல்லி ஸீதையைத் தூக்கிப்போதல் ராவணனது குலநாசத்திற்குக் காரணமாகுமென்றும், அதை அவன் மறந்து

விடவேண்டுமென்றும், புத்திமதி கூறினன். மாரீசன் வார்த்தை ந்யாயம் என்று தோன்ற, ராவணன் லங்கை வந்துசேர்ந்தான்.

வின 16.—ராவணனுக்கு வந்திருந்த நல்ல புத்தியை யார் எவ்வாறு மாற்றியது?

விடை.—ராவணன் லங்கை வந்து சேர்ந்ததும், சூர்ப்பநகை அலங்கோலப்பட்டு வெகு துக்கத்தோடு ராவணன் காலில் வந்துவிழுந்து, ராவணனது அரசாட்சியை பழிக்கத்தொடங்கினள். ஜநஸ்தானத்தில் ராக்ஷஸர்கள், ராமன் என்ற ஒரு மனிதனுல் மடிந்த ஸங்கதியைத் தெரிந்துகொள்ளத்திறனில்லா மேன்மை வாய்ந்த அரசன் என்று ராவணனை வெகு பரிஹாஸமாகவும் கோபமாகவும் பழிக்க, அவனுக்குக் கோபமுண்டாகி ராமர் முதலியோரது பராக்ரமங்களைப்பற்றிச் சூர்ப்பநகையை வினவினன். சூர்ப்பநகை ராமலக்ஷ்மணர்களது அழகு, பராக்ரமம், முதலியவைகளை வெகு விஸ்தாரமாய்ச் சொல்லிவிட்டு, முடிவில் ஸீதையின் அழகைப்பற்றியே வெகுவாக வர்ணித்தாள். முடிவில், ஸீதை ராவணனுக்கு ஏற்ற பெண்ஜாதி என்றும், அவள் லங்கைக்கு வந்தால் ராவணனுக்கு ஸகல ஐச்வர்யங்களும் கைகூடும் என்றும் சூர்ப்பநகைசொல்ல, மாரீசனது புத்திமதியால் வந்த நல்ல புத்திகள் யாவும் சின்னபின்னமாய் விட்டன. ஸீதையை எப்படியாவது தூக்கிவந்து லங்கையில் கொண்டு சேர்க்கவேண்டும் என்னும் துர் எண்ணம் அவனுக்குப் பலமாய் உண்டாய்விட்டது.

வினு 17.—அப்பொழுது ராவணன் முடிவில் என்ன செய்தான் ?

விடை.—முன்போலத் தனது விமானத்தில் ஏறிக் கொண்டு ராவணன், ஸமுத்ரத்தைத்தாண்டி மாரீசனது ஆச்ரமம் வந்து, அவனை, ஸீதையை எடுத்து வருவதில் தனக்கு ஸஹாயம் செய்யவேண்டுமென்றும் அதற்காக அவன் ஸ்வர்ணமயமாகிய மாயமானுகி, ராமரது பர்ணசாலையின் அருகில் விளையாடி, ஸீதைக்கு ஆசையை உண்டாக்கி, ராமரைக் காட்டில் வெகுதூரம் கொண்டுபோய், அங்கு ராமர் குரல்போல 'ஹா லக்ஷ்மணு ! ஹா ஸீதே'' என்று கத்தி, லக்ஷ்மணரை ஸீதையைவிட்டுப் போகும்படி செய்தால்தான், தனிமையாயிருக்கும் ஸீதையைத் தூக்கிவந்து லங்கையில் எளிதில் சேர்க்கமுடியும் என்றும், ராவணன் ஸீதையைத் தூக்கிப்போகும் விஷயத்தில் தனக்குத் தோன்றியிருக்கும் தந்த்ரத்தை மாரீசனுக்கு வெளியிட்டான்.

வினு 18 —இதற்கு மாரீசன் என்ன மறுமொழி கூறினுன் ?

விடை.—மாரீசன் தான் ராமபாணத்தால் விச்வாமித்ரர் யாகத்தில் பட்டபாட்டை நன்றுய் ராவணனுக்கு விவரித்துச் சொன்னுன். அதன்மேல் ராமர் தண்டகாரண்யம் புகுந்த உடன், தானும் சில ராக்ஷஸர்களும் மான் உருக்கொண்டு ரிஷிகளைக் கொன்று தின்று வருங்கால் அவர்களையும் ஸாதாரண ரிஷிகள் என்று எண்ணி அருகேசெல்ல, அவரது பாணவேகத்தைப் பார்த்த மாத்ரத்தில் தான் ஓடிப்போய் விட்டதையும் மற்றையவர்கள் அதற்கு இரையானதையும் எடுத்

துரைத்தான். ராமர் காதூஷணாதிகளைக் கொன்றதால் அவர்மீது தவறென்று சொல்லி முடிவில் ஸீதையைத் தூக்கிச்சென்றால் அதோடு ராக்ஷஸகுலமே ராமரால் அழிந்துவிடும் என்று ராவணனுக்குத் தன்னால் கூடிய வரையில் நயபயமாய்ப் புத்திமதிகள் கூறினான்.

வின 19.—ராவணன் பின்பு என்ன செய்தான்? மாரீசன் முடிவில் என்ன ஒப்புக்கொண்டான்? ஏன்?

விடை.—தனது மனம் இனிமேல் மாறாதென்பதாகவும், எவ்விதத்திலாவது ஸீதையை எடுத்துவருவதே நிச்சயம் என்பதாகவும், அதற்கு அவன் உதவி செய்யாவிடில், உடனே அங்கேயே அவனைக் கொன்று விடுவதாகவும் சொல்லி, மாரீசனுக்குத் தனது மன உறுதியை ராவணன் வெளியிட்டான். உடனே மாரீசன் ராவணன் சொல்லியபடி அவனுக்கு ஸகாயஞ்செய்வதாக ஒப்புக்கொண்டான். மாரீசனுக்கு அப்பொழுது, 'இங்கிருந்தால் நம்மை ராவணன் நிச்சயம் கொன்றுவிடுவான், மானாகச் சென்றால் ராமர் நம்மை ஒரேபாணத்தால் கொன்றுவிடுவார். ஆகவே நமக்கு எங்கிருந்தாலும் சாவுதான். இந்தப் பாபி கையால் சாவதைவிட, மஹானாகிய ராமர் கையால் இறப்பதே நலம்' என்ற எண்ணம் தோன்றவே அவன் ராவணனுக்கு ஸகாயஞ்செய்வதாக ஒப்புக்கொண்டான்.

வின 20.—மாரீசன் ராவணனுக்கு எவ்வாறு ஸகாயஞ்செய்ய யத்தனித்தான்? அப்பொழுது ஸீதை என்ன செய்தாள்?

விடை.—மாரீசன் ராமரது ஆச்ரமத்தருகில்

ஸீதை முன்பாக ஒழுகிய பொன்மானுகவந்து, தூரத்தில் சற்று மறைவதும், சற்று வெளிப்படுவதுமாக உலாவத் தொடங்கினுன். ஸீதைக்கு இந்த மான் தென்பட்டதும், அது தனக்கு வேண்டுமென்ற ஆவலுண்டாக, அவள் ஆச்ரமத்துள்ளிருந்த ராமலக்ஷ்மணர்களை அழைத்து அவர்களுக்கு அந்த மானைக் காட்டித் தன் ஆசையை அவர்களுக்குத் தெரிவித்தாள்.

வினு 21.—அப்பொழுது ராமலக்ஷ்மணர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—லக்ஷ்மணர் அந்த மானைக் கண்டதும், அது மாயமான் என்றும், மாரீசன் அவ்வுருவாய் வந்திருக்கிறுன் என்றும், ஆகையால் மான் ஆசையை ஸீதை விட்டுவிடவேண்டும் என்றும் தம்மாலியன்றமட்டும் சொல்லிப் பார்த்தார் ஸீதைக்கு அந்த மான்பேரிலிருந்த ஆசை மாறவே இல்லை. ராமருக்கும் அதை எப்படியாகிலும் உயிரோடாவது, கொன்ருவது, ஸீதைக்குக் கொடுக்கவேண்டுமென்னும் ஆவலுண்டாக, ஸீதையை வெகு ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்படி அவர் லக்ஷ்மணருக்கு கட்டளையிட்டுவிட்டு, வில்லையும் அம்பறுத்தூணியையும் எடுத்துக்கொண்டு மான் பிடிக்கப்போனுர்.

வினு 22.—ராமரால் துரத்தப்பட்ட மான் என்ன செய்தது? பின்பு ராமர் என்ன செய்தார்?

விடை.—மான் தோன்றி மறைந்துகொண்டே ராமரை வெகு தந்த்ரமாய், காட்டிற்குள் வெகுதூரம் இழுத்துச்சென்றது. வெகுதூரம் சென்றபின் ராமர்

மானை உயிரோடு பிடிப்பது கஷ்டமென்றுதெரிந்துகொண்டு, அதை ஒரேபாணத்தால் கொன்று தள்ளினர். சாகும் காலத்தில் மானுக்கு மாரீசரூபம் வர, அது முன் ஏற்பாட்டின்படி 'ஹா ஸீதே! ஹா லக்ஷ்மணா!' என்று ஸீதை காதில்விழும்படி ராமர் குரல் போல் கதறிவிட்டு இறந்தது. லக்ஷ்மணர் சொல்லியது ஸரியாய்விட்டதே என்று எண்ணிக்கொண்டு, மாரீசன் கதறியதால், ஸீதை கதி என்னவாகிறதோ என்று எண்ணமிட்டுக்கொண்டு ராமர் வெகு விரைவாய்த் தமது பர்ணசாலையை நோக்கி நடந்தார்.

வினா 23 —இதற்குள், மாரீசனது அலறலைக் கேட்டதும், ஸீதை ஆச்ரமத்தில் என்ன ப்ரமாதம் செய்துவிட்டாள்? இதனால் லக்ஷ்மணர் என்ன செய்தார்?

விடை.—மாரீசனது கூக்குரலை, ராமரது குரல் என்று எண்ணி மோசம்போய் ஸீதை தனது நாயகனுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்று, மிகுந்த பரபரப்புடன் லக்ஷ்மணரை ராமர் இருக்குமிடம் போய்ப் பார்த்துவரும்படி ஏவினள். காதுஷணாதிகளை ஒரு முகூர்த்தகாலத்தில் ஒருவராகவே கொன்ற ராமருக்கு ஒரு ஆபத்தும் வந்திராது; அவர் கூடிய சீக்ரத்தில் வந்து சேருவார் என்று லக்ஷ்மணர் ஸீதையை ஸமாதானப்படுத்தினர். உடனே ஸீதை படபடப்பாய், 'என் நாதன் இறந்தபின்பு, என்னைப் பெண்டாள எண்ணியா உன் தமையன் விஷயத்தில் இக்காலத்தில் இவ்வளவு அச்ரத்தையாய் இருக்கிறாய்? நீ இங்கே இருந்து போகாவிடில், நான் இப்பொழுது ப்ராணனை

விட்டுவிடுவேன்' என்று கதறி அழுது சொன்னாள். இதை வெறும் பிதற்றல் என்று எண்ணியே, லக்ஷ்மணர் மறுபடியும் தம்மால் இயன்றவரையில் ஸீதையைத் தேற்றப்பார்த்தார். கேட்காது, பிடிவாதமாய் ஸீதை 'என்காதன் இறந்தபின்பு என்னைப் பெண்டாள வேண்டுமென்ற துர்எண்ணங் கொண்டிருக்கிறாயா பாபி? என்று அடிக்கடி சொல்ல, லக்ஷ்மணருக்கு அடங்காத்துக்கம் வந்தது. பெண்பாலர் தன்மையைப் பொதுவாக நிந்தித்துவிட்டு, "உன் விதிப்படி எல்லாம் முடியும். இதோ நான் உன்னைத் தனிமையாய் விட்டு 'நாவினால் சுட்ட வடு' ஆறுமுன் பரிதவித்துக்கொண்டு உன் ராமரது உத்தரவுக்கும் விரோதமாய் அவரைத் தேடிப்போகிறேன்! உன்னை இந்த வனதேவதைகள் ரக்ஷிக்கட்டும்" என்று தன் கண்ணால் நீரைத் தாரை தாரையாய்ப் பெருக்கிக்கொண்டு ஸீதையைவிட்டு, காட்டில் மறைகிறவரையில் தாம் அவளையே திரும்பித் திரும்பி வெகு மனக்கவலையோடு பார்த்துக்கொண்டு, முன்னடி எடுத்துவைக்கமாட்டாது, லக்ஷ்மணர் ராமரை நோக்கிச் சென்றார்.

வினா 24.—இவ்வாறு லக்ஷ்மணர் அரை மனதோடு சென்றதும், ஸீதையிடம் யார் வந்தது? என்ன நடந்தது?

விடை.—இம்மாதிரி ஸீதை தனிமையாயிருக்கும் தருணத்தை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்த ராவணன், உடனே தன் ரதத்திலிருந்து இறங்கி, ஒரு தபோமுனி வடிவுடன், ஸீதை முன்பு வந்துநின்றான். ஸீதை யாரோ ஒரு ஸந்யாஸி வந்திருப்பதாக

எண்ணி அவருக்கு வந்தனை வழிபாடுகளைச்செய்து ஒரு திவ்ய ஆஸனத்தில் உட்காரும்படிச்சொல்ல, கபட ஸந்யாஸிக்கு மனதில் ஆசைபொங்கத் தொடங்கியது. அவன் வாயைத் திறக்கவில்லை அதிதிக்கு த்ருப்திகரமாய், தாம் பேசாதிருந்தால் எங்கே அவருக்குக் கோபம் வருமோ என்று பயந்தவளாய், ஸீதை வெகு வெட்கத்தோடு தனது பூர்வ வ்ருத்தாந்தங்களை ஆதியோடந்தமாகச் சொல்ல, ராவணனும் தனது உண்மைநிலையை ஒளிக்கமுடியாது, தான் லங்கேசன் என்றும், தான் குபேரனது தம்பி என்றும், தனக்குப் பெண்சாதியாக ஸீதை வந்துவிட்டால் அவளுக்கு ஸகல ஸுகங்களும் உண்டாகுமென்றும், ஸீதை இவ்வாறு காட்டில் வருந்தத்தக்கவள் அல்ல என்றும், வெகுவாகத் தனக்கு ஸீதைமேலிருந்த காதலை வெளியிட்டான். ஸீதைக்கு இதுவரையில் அந்த ஸந்யாஸியிடமிருந்த பயபக்தி எல்லாம் கோபமாக மாற, தன்னையொருவன் தொட்டால் அவன் ராமபாணத்திற்குக் கூடிய சீக்ரத்தில் இரையாவான் என்றும், தன்னை லங்கைக்குக் கொண்டுபோக எண்ணுதல், நெருப்பை மடியில் கட்டிக்கொண்டுபோக எண்ணுதற்கு ஸமானம் என்றும், வெகுவாக ராவணனைக் கவனியாமல், ராமரது பல பராக்ரமத்தைப் புகழத் தொடங்கினாள். இவைகளைக் கேட்டவுடன், வெகு கோபங்கொண்டு ராவணன் ஸீதையண்டை வந்து அவளைத் தனது கையால் தூக்கி, தன் ரதத்தில் உட்காரவைத்துக்கொண்டு லங்கை நோக்கிப் போவதாக ஆகாயத்தில் கிளம்பிவிட்டான்.

அப்பொழுது ஸீதை சுற்றுமுற்றுமுள்ள மரம் மட்டைகளை நோக்கிக் கதறி அழுதாள்.

விஞ 25.—இந்தத் தருணத்தில் ஸீதைக்கு யார் ஸஹாயஞ்செய்தது? ஸஹாயஞ்செய்தவர் கதி என்ன வாயிற்று?

விடை.—ஸீதையின் அழுகுரலைக்கேட்ட ஜடாயு என்ற கிழக்கழுகு, ஸீதைக்கு ஸஹாயமாக அப்பொழுது ராவணனை எதிர்த்து, வெகு விசித்ரமாகச் சண்டையிட்டு ராவணனது ஆயுதங்களை யெல்லாம் முறிதெறிந்துவிட்டு, அவனது ரதத்தையும் உடைத்து, அவனையும் கீழே தள்ளிவிட்டது. தோல்வியடைந்த ராவணன், ஜடாயுவை கவனியாது ஸீதையைத் தூக்கிக்கொண்டு, லங்கையை நோக்கிப் போகவும் ஆகாயமார்க்கமாய்க் கிளம்பினான். ஜடாயு மறுபடியும் அவனை எதிர்த்தது. உடனே அதிகக் கோபத்துடன் ராவணன் ஸீதையைக் கீழேவைத்துவிட்டுத் தனது உடைவாளை உருவி, ஜடாயுவின் இறகுகளையும் கால்களையும் வெட்டிவிட்டு, ஸீதையை எடுத்துக்கொண்டு லங்கையை நோக்கிப் புறப்பட்டான்.

விஞ 26.—ஸீதை. போகும் வழியில், தான் போனவழியை ராமருக்குத் தெரிவிப்பதற்கு என்ன உபாயம் செய்தாள்?

விடை.—ஸீதை, போகும் வழியில், ஒரு மலைச் சிகரத்தில் ஐந்து வானரங்கள் கூடியிருப்பதைக்கண்டு, அவர்கள் மத்தியில், தனது ஆபரணங்களிற் சில வற்றை, தன் பட்டுத்துணியிலிருந்த ஒரு கிழியில்

சுருக்கிட்டுப் போட்டாள். தனது நாயகன் தேடிவருகையில், அவர்கள், அவருக்கு இந்த ஸங்கதியைச் சொல்லட்டும் என்ற எண்ணத்துடனேயே ஸீதை இவ்வாறு செய்தாள்?

வினு 27.—லங்கை போனதும் ராவணன் ஸீதையை என்ன செய்தான்?

விடை.—தனது அரண்மனைக்கு ஸீதையைக்கொண்டுபோய்ச்சேர்த்து, அவளுக்குத் தனது ஐச்வர்ய வைபவங்களைக் காட்டி, எப்படியாவது அவளைத் தான் வசப்படுத்தலாமென்று பார்த்தான். ஸீதை ராவணனை ஒரு த்ருணமாக எண்ணிப் பேசினளேயொழிய, அவனை மதிக்கவேயில்லை. இதைக் கண்டதும் ராவணனுக்கு அடங்காக் கோபம் வர, கோரரூபிகளான ராக்ஷஸிகளிடம் ஸீதையை ஒப்புவித்து, அவளைத் தன் உத்யானவனமாகிய அசோக வனத்திலிருக்கும்படிச் செய்து, நயவழிகளாலாவது பயங்கர வழிகளாலாவது ஸீதையைத் தன் வசப்படும்படிச் செய்யவேண்டும் என்று ராக்ஷஸிகளுக்கு ராவணன் கட்டளையிட்டான். மேலும் ஸீதையை நோக்கி, 'நீ கூடிய சீக்ரத்தில் என் வசப்படாமலிருந்தால் உன்னை நான் கொன்று தின்று விடுவேன்' என்று பயமுறுத்தி, அவளை ராக்ஷஸ ஸ்த்ரீகளோடு தனிமையாய் விட்டுவிட்டு ராவணன் தனது அரண்மனை சென்றான்.

வினு 28.—ஸீதை அசோகவனத்தில் எவ்வாறு வஸித்துவந்தாள்? அப்பொழுது அவளை யார் எவ்வாறு தேற்றியது?

விடை.—ராவணன் போனதும், ஸீதைக்குக் கஷ்டத்தால் தூக்கம் பிடிக்கவில்லை. ராக்ஷஸிகள் நான்கு புறத்திலும் ஸீதையை, தமது கோரரூபம், கொடிய வார்த்தை முதலியவைகளால் வருத்தி வந்தார்கள். ஸீதையோ இவைகளைக் கவனியாது, ஸதா ராமஸ்மரணையிலேயே இருந்தாள். ஸீதை ஒன்றும் உட்கொள்ளாதும் தூக்கமில்லாதுமிருந்து ராவணனது கஷ்டம் பொறுக்கமாட்டாது இறப்பாளாயின், ராமகார்யத்திற்குக் குறைவுவருமே என்ற பயம் இந்த்ரனுக்கு உண்டாயிற்று. உடனே ப்ரஹ்மாவினது அநுமதியின் பேரில், இந்த்ரன் தெய்வீகமான பாயஸத்தை எடுத்துக்கொண்டு, தூக்கத்தின் தேவதையைத் தன்னோடு அழைத்துக்கொண்டு லங்கைவந்து அங்கு எல்லோரையும் பெருந்தூக்கத்திற்கு ஆளாகும்படிச் செய்துவிட்டு தான் ஸீதையண்டை சென்று மறைந்துகொண்டு 'ராமர் ஸௌக்யமாய் இருக்கிறார். நீ துக்கியாதே, தைர்யமாய் இரு. கூடிய சீக்ரத்தில் தகுந்த ஸஹாயத்தோடு ராமர் லங்கைக்கு வந்து ராவணனைக்கொன்று உன்னை அழைத்துக்கொள்வார். நான் இந்த்ரன். என் வார்த்தையில் நம்பிக்கை வை. இந்தப் பாயஸத்தைக் குடி. உனக்கு ராமர் வரும்வரையில், பசி, தாகம், களைப்பு முதலியவைகள் தோன்றமாட்டா' என்று அவளைத் தேற்றினான். பின்பு ஸீதையின் வேண்டுகோளின்படி, இந்த்ரன் தனது ரூபத்தைக் காட்ட, ஸீதை பாயஸத்தைக் குடித்து மனந்தெளிந்தாள். இந்த்ரன் அவளை ஸமாதானப்படுத்திவிட்டு, தன் லோகம் சென்றான். ஸீதை அன்றுமுதல் தைர்ய

மாய் ராமாதுவரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

வின 29.—இது நிற்க, ஸீதையினது கொடுஞ் சொல்லைப் பொறுக்க முடியாது ராமரைத் தேடிச் சென்ற லக்ஷ்மணர் கதி என்னவாயிற்று?

விடை.—லக்ஷ்மணர் ஸீதையைத் திரும்பித்திரும் பித் தன் கண்ணுக்குத் தெரிகிறவரையில் பார்த்துக் கொண்டுபோக, காட்டிற்குள் வெகுதூரம் போய் விட்டார். அப்பொழுது, ராமர் வாடிய முகத்தோடு 'மாரீசனது ஹீநத்வநி, ஸீதைக்குக் கேடு உண்டா க்கியிருக்குமோ, லக்ஷ்மணன் ஸீதையைத் தனிமை யாய் விட்டு நம்மைத்தேடப் புறப்பட்டிருப்பானோ,' என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், லக்ஷ் மணர் எதிரே வருவதைக்கண்டார். இருவரும் ஸந் தித்தனர். ராமர், தனிமையாய் ராக்ஷஸர் நிறைந்த காட்டில் ஸீதையை விட்டுவந்ததற்காக, லக்ஷ்மண ரை மிக்கக் கடிந்துகொண்டார். லக்ஷ்மணர், ஸீதைக் கும் தனக்கும் இந்த விஷயமாக நடந்த ஸம்பாஷணை களை ஆதியோடந்தமாகச் சொல்லி, தாம் ஸீதையின் வாய்பாணத்தால் அடிக்கடி அடிபட்டுப் பொறுக்க முடியாது அவளைத் தனிமையாக விட்டுவந்ததாகச் சொன்னார். உடனே ஸீதைக்கு ஏதோ ஒருகேடுவந்து தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம் ராமருக்குத் தோன்ற, அவர் வெகு வேகமாய் தமது ஆச்ரமம் நோக்கிச் சென்றார்.

வின 30.—ஆச்ரமம் வந்து ஸீதையைக் காணாத

தும் ராமர்கதி என்னவாயிற்று? அவரை யார் எவ்வாறு தேற்றினது?

விடை.—ஸீதையைக் காணாமற்போனதும், ராமருக்கு அடங்காத் துக்கம்வர, அவர் வாய்விட்டு அலறத் தொடங்கினார். காட்டிலிருக்கும் கல், மரம், மட்டை முதலியவைகளைப் பார்த்து, பைத்தியம் பிடித்தவன் போல், 'ஸீதையை நீங்கள் கண்டதுண்டா?' என்று கேட்கத் தொடங்கினார். காடெங்கும் ஓடித்துடித்து ஸீதையைத் தேடத்தொடங்கினார். இவ்வாறு என்ன செய்தும், ஸீதை போனவிடம் தெரியாதது கண்டு, கோபாவேசத்தில் வாயில் வந்தபடி எல்லாம் பிதற்றத் தொடங்கினார். லக்ஷ்மணர் ராமரைப் பலவாராகத்தேற்றி, இப்படி அழுவதால் ப்ரயோஜனமில்லை என்றும், ஸீதை போனவிடத்தைத் தேடி அறிய முயலவேண்டும் என்றும் தெரிவித்தார்.

வினா 31.—இவ்வாறு லக்ஷ்மணர் தேற்றிய உடன் ராமர் ஸீதையைத் தேடுவதில் என்ன ப்ரயத்நம் செய்தார்? அப்பொழுதுவந்த ப்ரமாதத்தை யார் எவ்வாறு மாற்றியது?

விடை.—அப்பொழுது ஒரு மான் கூட்டம் இவர்கள் கண்ணில் தட்டுப்பட, மான்களை ராமர் துக்கமிகுதியால் ஸீதைபோன விடத்தைத் தெரிவிக்கும்படிக் கேட்க, அவை தம் கழுத்தைத் தூக்கிக்கொண்டு தெற்கே ஓடின. அவைகளின் பின்னே இவர்கள் செல்ல, வழியில் ஸீதையின் புஷ்பங்கள் சிதறுண்டிருப்பதைக் கண்டு ஸீதையை யாராவது ராக்ஷஸர்கள் எடுத்து ஓடிப்போயாவது அல்லது கொன்று

தின்றுவதிருக்கவேண்டும் என்று ராமர் கருதி னார். அவர் அப்பொழுது, அதிகமாக நடக்கமுடி யாமல், அங்கே உட்கார்ந்து ப்ரலாபிக்கத் தொடங் கினார். அங்கு அருகிலேயே, ராவணனது ரதம் ஸா ரதி, கொடி, ஆயுதம் முதலியவை சின்னாபின்னமாய்க் கிடப்பதைக் கண்டு, ஸீதை விஷயத்தில் யாரோ இரண்டு ராக்ஷஸர்கள் சண்டையாடிக் கொண்டதாக ராமருக்குப் பட, அவர் முன் எண்ணம் திடப்பட்டது. அப்பொழுது ராமருக்குக் கோபம் அதிகரிக்க, 'ஸக லத்திற்கும் ஸாக்ஷியான தேவதைகள், என்னிடம் ஸீதை இருக்கும் இடத்தைச் சொல்லவாவது அல்லது அவளை என்னிடம் கூடிய சீக்ரத்தில் கொண்டு சேர்க்கவாவது செய்யாமற்போனால், இதோ நான் ப்ரஹ்ம ஸ்ருஷ்டி முழுவதையும் அழித்துவிடுவேன்' என்று சொல்லிக்கொண்டு தமது வில்லில் பாணத்தை வைத்துவிட்டார். அப்பொழுது லக்ஷ்மணர், 'ஒரு வன் குற்றத்திற்காக உலகை அழிப்பது ந்யாயம ன்று' என்ற விஷயத்தை ராமருக்கு நன்றாய்த் தெரி வித்து அவரது கோபத்தைத் தணிக்க, இருவரும் ஸீதையைத்தேடிக் கொஞ்சதூரம் சென்றனர்.

வினா 32.—அங்கு அவர்கள் எதைக் கண்டார் கள்? அங்கு என்ன நடந்தது? ஏன்?

விடை.—இவ்வாறு ராமர் கோபமாய்ப் போகும் பொழுது, ஸீதைக்கு ஸஹாயஞ்செய்யப்போய் ராவ ணனால் சிறகறுபட்டுக் குத்துயிராய்க் கிடக்கும் ஜடாயுவை எதிரே அவர்கள் கண்டார்கள். ராமர் அதைக் கண்டதும் ஆத்ரப்பட்டு 'ஸீதையை விழுங்

கிய ராக்ஷஸன் கழுகு ரூபமாய் இங்கு படுத்து உறங்குகிறான்' என்றெண்ணி, அவனைக் கொல்லத் தமது வில்லில் பாணத்தை வைத்துவிட்டார். அப்பொழுது, ஜடாயு ஹீநஸ்வரத்தோடு, தனக்கும் ஸீதையை எடுத்துச்சென்ற ராவணனுக்கும் நடந்த சண்டையை ஆதியோடந்தமாகச் சொல்லி, உயிர்விட்டது. அப்பொழுது தமது தகப்பனார் நேசனான ஜடாயு, தமக்காக இறந்த துக்கம் ஸீதையை இழந்த துக்கத்தைவிட அதிகமாக, ராமர் ஜடாயுவைத் தசரதர் என்றே பாவித்து அதற்கு வேண்டிய ஈமக்கடன்களைச் சாஸ்த்ரவிதிப்படி நடத்திவிட்டு, * ஜடாயுவின் சொற்படி தெற்கு நோக்கி ஸீதையைத் தேடிக்கொண்டு புறப்பட்டார்.

வினா 33.—இவர்கள் போகும் வழியில் முதலில் இவர்களுக்கு என்ன ஆபத்து நேர்ந்தது? எப்படி இவர்கள் தப்பித்துக்கொண்டார்கள்?

விடை.—ஸீதையைத் தேடிக்கொண்டு இவர்கள் வருகையில், ஓர் இருண்ட குகைக்கு வந்தார்கள். அங்கு அயோமுகி என்ற ராக்ஷஸி இவர்களைப் பிடித்துக்கொண்டு தன்னோடு அங்கேயே ஸுகித்துக்கொண்டு நெடுங்காலமிருக்கும்படி அவர்களைப் பலவந்தஞ் செய்தாள். உடனே லக்ஷ்மணர் தமது கத்தியால் சூர்ப்பநகையை அவமானஞ்செய்ததுபோல் அயோமுகியையும் அலங்கோலஞ்செப்ப, அவள் கூக்குரலிட்டுக்கொண்டு இவர்களை விட்டுக் காட்டுக்குள் ஓடிப்போயினள்.

வினா 34.—இதன்பின் இவர்களுக்கு என்ன

ஆபத்துண்டாயிற்று? இதிலிருந்து இவர்கள் எவ்வாறு வெளியேறினர்?

விடை.—இவர்கள் தெற்கே போகையில், கோரமான அபசகுநங்களைக்கண்டு, தமக்கு ஏதோ ஒரு ஆபத்து வரப்போகிறதென்று அறிந்தனர். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் கபந்தன் என்னும் ஒரு ராக்ஷஸன் கையுள் இவர்கள் அகப்பட்டுக்கொண்டு, அவன் இழுத்தபடி சென்று முடிவில் அவன் அருகில் வந்தார்கள். அப்பொழுது அவனுக்குத் தலையே இல்லாமலிருப்பதையும், வயிற்றில வாப் இருப்பதையும் கண்டார்கள். இந்தக் கோர ரூபமுடைய ராக்ஷஸன் வாயின் அருகில் வந்ததும், ராமலக்ஷ்மணர்கள் இருவரும் தமது வாளால் இந்த ராக்ஷஸனது கைகளை வெட்டிவிட்டனர். உடனே இந்த ராக்ஷஸன் பல மிழந்துவிட, ராமரது பூர்வ சரிதங்களை விசாரித்தறிந்துகொண்டு மிகுந்த ஸந்தோஷமடைந்தான்.

வினா 35.—இந்த ராக்ஷஸன் யார்? இவனுக்கு இக்கோரரூபம் வருவானேன்? இவன் ராமரது கதையைக் கேட்டதும் ஸந்தோஷ மடைவானேன்?

விடை.—இவன் முன் ஜந்மத்தில் ஒரு அழகிய கந்தர்வபுருஷனா யிருந்தான். ஒருநாள் அவன் ஸ்தூலசிரஸ் என்ற ரிஷியைப் பழிக்க, அவர் அவனுக்கு ராக்ஷஸரூபம் ஸ்திரமாயிருக்கட்டும் என்று சபித்தார். அவன் அவருக்கு ஸந்தோஷமுண்டாகும்படிச் செய்ய, அவர், தசரதர் பிள்ளைகளாகிய ராமலக்ஷ்மணரால் அவன் வெட்டுண்டு தகநம் செய்யப்பட்டதும், அவனுக்குப் பழைய ரூபம வரக்கடவது என்று

அநுக்ரஹித்தார். அதன் பின்பு அவன் இந்த்ரனை உபத்ரவப்படுத்த இந்த்ரன் வஜ்ராயுதத்தால் அவன் தலையில் அடித்தான். அப்பொழுது அவன் தலை, வயிற்றில் அழுந்திப்போக அவனுக்குக் கபந்தன் என்ற பெயர் வந்தது. பின்பு இந்த்ரனது அநுக்ரஹத்தால் அவனுக்கு நீண்ட கைகளுண்டாக, அதன் மூலமாய் இவன் ப்ராணிகளைச் சேர்த்து விழுங்கிப் பிழைத்துவந்தான். ராமர் இவன் கையை வெட்டி, தான் ராமர் என்று சொல்லிக் கொண்டதும், ஸ்தூலசிரஸின் வாக்யம் இவனுக்கு ஞாபகம் வர, இவனுக்கு ஸந்தோஷமுண்டாயிற்று.

வினா 36.—கபந்தனுக்கும் ராமருக்கும் என்ன ஸம்பாஷணை நடந்தது? கபந்தன் எவ்வாறு சாபம் நீங்கினான்?

விடை.—பின்பு கபந்தன் ராமரைத் தனது தேகத்தைத் தகநம் செய்துவிடும்படி கேட்க, அவர் ஸீதை போனவழியைச் சொல்லும்படிக் கேட்டார். தனது நிஜரூபம் வந்தால்தான் தனக்குச் சொல்லத்தக்க சக்தி வரும் என்று சொல்ல, ராமர் அவனது தேகத்தைத் தகநம் செய்துவிட்டார். உடனே கபந்தன் சாபம்நீங்கி, விராதனைப்போல திவ்ய ரூபத்தை அடைந்தான்.

வினா 37.—கபந்தன் ராமருக்கு என்ன விஷயங்களைத் தெரிவித்தான்?

விடை.—அப்பொழுது, ஸீதையைத் தேடவல்ல சில வாநரங்கள், அருகிலிருக்கும் ரிச்யமூக பர்வதத்தில் ஸுக்ரீவனது ஆஞ்ஞைக்குட்பட்டு இருக்கிறார்கள்